ஜிநேந்திர ஞானத் திருப்புகழ்.

" தலையகனு நாலுமுனியு மிம்மூன்றும்
நிலைமைய தாகும் பொருள். "

—அருங்கலச்செப்பு.

ஸ்ரீ

மதுரைஜில்லா, செம்பூர் வித்வான்,

ஸ்ரீமத்-வீ. ஆறுமுகஞ்சேர்வையார்

அவர்களால் இயற்றப்பெற்ற

சிறப்புப் பாயிரம்.

நிலமண்டில வாசிரியப்பா.

முந்நீ ருலகி னன்னீர் மைத்தக
வெந்நீ ருமே தந்நே ரகத்து
நிலைபெற வைத்துக் கொலை முதலாய
அலைத்தற் கருமந் தொலைத்தற முஞற்றி
நாற்கதி களினு மேற்கதி வீட்டின்
பாற்செல விலகும் நாற்பா லாய
அறநூ லியற்றிமா சறமூ வுலகின்
திறமலி யுச்சியிற் சிறந்தொளிர் கடவுள்
இசையெலாந் திசழ இசைபல விரவி
நசைசெறி தமிழின் வசையிலா தியன்ற
திருப்புக ழென்னும் பொருட்டொகு நூலினை
விருப்புடன் தச்சை யிருப்பிட மாக்கொள்
தேவரா ஜென்னும் நாவல முனிவன்
பாவகை பலவும் மேவிடச் செய்தனன்
இப்பெருந் தகைசால் துப்புடை நூலை
ஒப்பில் வளங்கள் எப்பொழு துஞ்சேர்
மேல்மின் னற்பதி மேனா ளிற்புரிந்
தேல்தவ மிகையி னால்வரு மதியுங்
கலைபயில் திறமு மலைவிலா தவையில்
நிலைபெறப் பேசு நலநா வன்மையுங்

கொண்டாங் குதித்த கொண்டலங் காத்தான்
சக்கர வர்த்தியாஞ் சர்க்கரை வசன
மிக்குறு தகையினன் அக்கரை யொடுமா
ஆரணி யென்னும் பேரணி நகரின்
சீரணி ஜைன நேரணி சோதர
சங்கத் துளமா வங்கத் தினரின்
தங்குபே ருதவியின் எங்கும் பரவ
அச்சு வாகனத் திச்சையி லேற்றி
மெச்சிட விடுத்தனன் இச்சக மீதே
இவற்குமிச் சங்கத் தவர்க்கும் மிறைவன்
உவப்புற நலம்பல வுதவுவன் மாதோ.

முகவுரை

பூமகட்கோ ரெழின்முகமெனத்திகழுஞ் சீர்மலிந்த விப்பரதகண்டத்தில் "குணகடல், குமரி, குடகம், வேங்கடம்" எனும் நான்கெல்லையினுள் பரவி இன்பம் விளைப்பது தனித் தமிழ்மொழியாம். இம்மொழியில் பூர்வீகம் நமது பெரியார் நமக்குப் பெருந்தனமாகப் பாடியளித்த நூற்கள் எண்ணிலடங்காதனவாகும்; அவற்றில் எண்ணிலடங்குவனவே இவ்வமயம் எஞ்சியுள்ளன; எஞ்சியவற்றிலும் சிதைந்துகிடப்பன சில; சிதல்கட்கிரையாகிச் சீர்கெட்டுவருவன சில; அச்சுவாகனமேறி வெளிவந்தன அவற்றிலுஞ் சிலவேயாகும்; மற்றும் பல அரிய நூற்கள் மண்ணில் புதைந்தும், மறைந்தும், சிலரிடத்தில் சிக்குண்டு வெளிவாராது மாழ்கியுங்கிடக்கின்றன.

இவ்வித நிலைமையில் நந்தமிழணங்கு எழில் வாடியுள்ளாளென, உள்ளபடியோர்ந்த சில கனவான்கள் அங்ஙனம் அது தாழ்ந்த நிலைமையிலிராதவண்ணம் பெருமுயற்சியெடுத்து பூர்வீக கிரந்தங்களைப்புதுப்பித்து அக்கலைமக ளெழி லொளிரச்செய்கின்றனர். இவர்கட்கு நாம் எழுமையும் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். இத்தகைய மகோபகாரிகளின் பேருதவியைக்கொண்டு நானும் சில ஜைனநூல்களை வெளியிடவேண்டுமென்று சில மாதங்களாக முயன்று இப்போது முதலாவதாக இந்நூலை வெளிப்படுத்த முன்வந்தேன்.

அருகத் பரமேஷ்டிகள் திருக்கோயில்கொண்டெழுந்தருளிய பல தலங்களின் சிறப்புக்களையும், அக்கடவுள் மகிமைகளையும் விளக்கமாகக் கூறுவது, "ஜினேந்திரஞானத் திருப்புகழ்" என்னும் இந்நூல். இதனை இயற்றியவர் செந்தமிழ்ப்புலமையும், தெய்வபக்தியும் சேரப்பெற்ற தேவராஜமுனிவர் என்னும் பெரியார்; இவர் எக்காலத்திலிருந்தவரென்பது புலப்படவில்லை; இவர் "தச்சை" என்னும் பதியிலிருந்ததாக எட்டுப்பிரதியினீற்றில் குறித்துள்ள வெண்பா வொன்றினால் புலனாகின்றது.

இந்நூற்பாக்கள் காலாந்தரத்தில் எடுத்தெழுதுவோரால் பெருகிவந்த பிழைகள் மிகவும் செறிந்துகிடந்தன. அவற்றை ஒருவாறு வேறு பிரதிகளின் உதவிகொண்டு திருத்தினேன்; எனினும் சில பாக்களில் பொருள் விளங்காது அமைந்துள்ள பதங்களைத் திருத்துவதற்கஞ்சி அவற்றை அவ்வாறே பதிப்பித்துள்ளேன். ஆதலின் வேறு சுத்தப் பிரதியுள்ளவர்கள் இப்பதிப்பிற்காணும் பிழைகளை எனக்குத் தெரிவிப்பரேல் அவற்றை வந்தனத்துடன் ஏற்று மறுபதிப்பில் திருத்திக் கொள்வேன்.

இந்நூலை அச்சிடுவதற்கு ஏட்டுப்பிரதி நல்கினவர்கள், பெரிய கொழப்பலூர் ஸ்ரீமான். க. பூபால நயினார்; நாவல். ஸ்ரீமான். பத்திரபாகு நயினார்; திருமலை. ஸ்ரீமான். ஆதிநாத உபாத்தியாயர் முதலியவர்களாவர். இவர்கள் செய்த உதவி என்றும் மறக்கற்பாலதன்று.

பிரதிகளை ஒப்புநோக்கி சில பாடபேதங்களைத்திருத்தி உதவிசெய்த வேலூர். தமிழ்ப்பண்டிதர். ஸ்ரீமான். சபாபதி முதலியார் அவர்கட்கும், எனதாப்த நண்பர், ஸ்ரீமான். கா. மு. சின்னப்பா பிள்ளையவர்கட்கும் என்றும் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

இக்காலத்திற்கியையுமாறு, இதற்கு இராக தாளங்கள் அமைத்துத் தந்த சென்னை-தேவாரம். ஸ்ரீமான். அப்பாதுரை ஆச்சாரியவர்கட்கு யான் வந்தனஞ் செலுத்துவதல்லது வேறு யாது செய்யவல்லேன்.

இன்னும் இந்நூலை அச்சிடுவதற்குப் பொருளுதவிபுரிந்த ஆரணி ஜைன சகோதர சங்கத்தாரு (Jaina Brotherhood Arni) க்கு நன்றி செலுத்த நான் மிகவும் கடமைப்பட்டுள்ளேன். இச்சங்கத்தார் மேலும்மேலும் பண்டைய நூற்கள் இறந்துபடாவண்ணம் அவற்றை அச்சியற்றி என்றும் பொன்றாப் புகழ்பெற்றுப் பல்லாண்டு பல்லாண்டாக நிலைபெற்று வாழ இறைவனை இறைஞ்சுகின்றேன்.

இந்நூல் அச்சில் வெளிவர தூண்டுதலாயிருந்த எனதாருயிர் நண்பர் ஆரணி மளிகை ஸ்ரீமான். வசுபால நயினார்குமாரர் A.V. வர்த்தமான நயினாரவர்கட்கும், வேதாந்த விசாரணையே தமது காலப்போக்காக

வுடைய எனதாப்த நண்பர்—பூட்டுத்தாக்கு, பிராஞ்சு போஸ்ட் மாஸ்டர் ஸ்ரீமான். B. கிருஷ்ணஸ்வாமி முதலியாரவர்கட்கும், புதுக்காமநல்லூர் ஸ்ரீமான். P. J. எசோதர நயினாரவர்கட்கும் எனதன்பார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன்.

இஃது அச்சிடுங்கால் புரூப் முதலியவைகள் திருத்தி உதவிசெய்த ஸ்ரீமான். இராலிங்கம் பிள்ளையவர்கட்கும் நான் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்நூற்பதிப்பு முட்டின்றி முடிய அருளிய முக்குடையானது பொற்சழலைத் திரிகரண சுத்தியோடும் அநவரதமும் வாழ்த்துங் கடப்பாடுடையேன் யான்.

சென்னை. }
7-4-1920. }

இங்ஙனம்,
மே—சக்கிரவர்த்தி.

JINENDRA JNANA

THIRUPPUGAZH.

Love of God.

"Could we with ink the ocean fill;
Were the whole Earth of parchment made;
Were every single stick a quill,
And every man a scribe by trade;—
To write the love of God alone,
Would drain the ocean dry;
Nor would the scroll contain the whole,
Though stretched from sky to sky."—

— *The Book of Humour, Wit and Wisdom.*

M. Chakravarthi.

ஶ்ரீ

ஜிநாய நம:

தேவராஜ முனிவர் இயற்றியருளிய

ஜிநேந்திர ஞானத் திருப்புகழ்.

சித்தைப்பதி.

இராகம்,—ஆனந்தபைரவி.] 1. [தாளம்,—திரிஸ்ரஜாதி திரிபுடை.

முத்துப்பல தெற்றுக் கெழில்மதி
சத்திரத்திரய முத்தப்ரபை யொளி
மொய்த்தப் பிரபவலயத் தோடிரவி யொருகோடி
முற்பட்டொளி பெற்றுக் குலவிய
ரத்னப் பிரப வித்துத்தரியணை
மூட்கக் கமலத்திற் பாவிய லருள்பாதா
சித்தத்துதி கற்பித் தமரர்கள்
தித்தித்திமி திமிதித் திமிதிமி
திக்குத்தகு திகுத் தகுத்தகு திகுதீதோ
சித்திப் பல சுத்தக் கொடுவித
நிர்த்தத்துட னெக்கப் புடாடி
திட்டப்பட பற்றித் தொழுபவர் திருமாலே
சுத்தத் தெழில் சித்தத்தினில்மிகு
மத்தக்களி றெத்திட்டிடு முனி
சுப்பிரத்திரத யத்திற் குடிபுகு குணநாதா

சொற்பப்பற்றுட னெட்டுப் பகைவினை
கெட்டுக்கிடு நட்டற் றெடுபொடி
தெர்க்குத் தொகு பட்டுத் துகுளெழ பொருவோனே
பத்தித்திரு முத்திக் கிறையெனு
மெத்தப்புல விக்கிரத் திறலுடை
புத்தர்க்கிரு சுத்தப்பத மருள் புனிதேசா
பட்சத்துடன் ரட்சித் தெனை யருள்
சொர்க்கத்தவர் தக்கக் கடவுளே
பத்மப்பொழில் சித்தைப்பதி யுறை பெருமாளே.

இராகம்,—சங்கராபரணம்.] 2. [தாளம்,—சதுர்ஸ்யஜாதி ரூபகம்.

விரதசீல ஆசார பரமஞான மாதார
மிலகுசாவ காசார குணமூடே
வெகுபுராண சாராதி வுகையினாலுமே யோதி
விதிதரக ஞர்பாதம் மிகாஞம்
வரிசையாகியே பாடி உரிமையாகவே தேடி
மனமுமாற வேகூடி யினிதாகி
வழுவிலாத தேசாதி யழகு தீபதூபாதி
வகைபலாதி நாஞதி சருவாலும்
வெறியுலாவு பூவாலுஞ் சுரகுசீத நீராலும்
மிகநல்சாலி மேலாலு மதனாலே
விலகிடாததோர் வாச மலையசாதியால் நேச
மினியரசத ஞகைசை யதனாலும்
மருவிநாடியே யானே தினமுமாரவே தானே
வகையொடாடி யேபூணு மலர்பாதா
வசையிலாத மேலான நிசசரோ ருகமான
மலருலாவியே தோணும் பெருமாளே.

திருநறுங் கொண்டை.

இராகம்,-கமாஸ்.] 3. [தாளம்,-திரிஸ்ரஜாதி ரூபகம்.

பாகுமொழி மாதர்தங்கள் மோகமதிலே மயங்கி
பாரதன மீதணைந்து ருமயலாகி
பாலதர மேவியுண்டு கோலமுடனே துவண்டு
பாரமுவ னுயுழண்டு பலநாளும்
மோகமனையாளரென்று வாருசுதர் தாயர்தந்தை
மூலதன தான்யதொரந்த மெனுமோகம்
மூடிமயலே பரிந்து ஓடியலையே சிறந்து
மூடபல சூதுகந்து முழல்வேனோ
வேகவினையே துறந்த சோகநிழலான வுந்தன்
வீசுமலர் தாளுகந்து மருளாக
வீறுபெறவே வழங்கி யாறுதலையே யிணங்கு
வேதசருவேச பஞ்ச பதனுதா
நாகரிக மானசிங்க வாகனையின் மீதிருந்து
நாடிபவமே கடிந்த வும்பர்கோவே
நாலுமறையே பொதிந்த சாலவொளி ஞானதந்திர
ஞான நிதியான கோண்டைப் பெருமாளே.

இராகம்,-கமாஸ்.] 4. [தாளம்,-திரிஸ்ரஜாதி ரூபகம்.

கனகவிழி மங்கைதன் குலவுமயல் சங்கையின்
களபமுலை ரண்டையுங் கண்டு மாலாய்
கடிதுடை யடைந்திடுந் துடியிடை யிடங்கொளுங்
கலையுள மகிழ்ந்திடும் முந்தயிரஞ்

சலமுறு விடம்புனேந் தலவுமா வின்படந்
தருமல் குவின்தடந் தங்கியாசை
சகலரு மயங்கியுஞ் சுகமென முயங்கியுந்
தலைமுறை தயங்கவு மந்தமாமோ
பலபல பவங்களும் விலகிட வரங்களும்
பகர்மொழி யுரங்களுந் தந்திடாயோ
பரமசுக மிஞ்சிடுந் திருகேவ லவஞ்சியின்
பரிவுடனே கொஞ்சியன் பம்புநேசா
நிலைமை யருகந்தனங் கலைவல குணந்தனின்
நிபுணமதி யந்தனஞ் சுந்தரேசா
நிருமல நிரஞ்சனம் பொருமதன பஞ்சனம்
நிமலபத கஞ்சனந் தம்பிரானே.

கச்சிநகர்.

இராகம்,-கரகரப்ரியா.] 5. [தாளம்,-சதுர்ஸ்யஜாதி திரிபுடை.

ஆசித்தேயொரு பொற்றொடி யைத் தலை
மேல்வைத்தேயொரு பக்கமொருத்தியை
ஆலித்தேயவர் சித்தவலைப்பட் டனுராக
ஆழிக்கேமுழு கிக்கிரியைப்பிடி
தாகத்தோடு முரித்தடலைத்தரி
யாலக்கால விடத்தையனுஷ்டித்தவர் தேவோ
நேசித்தேவரு மர்ச்சுனருக்கொரு
சாரத்தியென வுற்றிரியொத்தர
நீறிட்டேக முடுக்கி விடுத்துட னவதாரம்

நீடுற்றேயவர் பத்துவிசைப்பிறந்
தோனைத்தேவரெ னத்துதிகற்றவர்
நீசத்தோஷ வினைக்கடலைத்தொலை யுதலாமோ
நேசத்தோர்முடி யற்றகுறைத்தலை
யாகத்தூர்வசி யிட்டுதவத்திழி
தீதுற்றீடழி வுற்றவனைப்பிரபு வெனலாமோ
தேவத்தேவர் துதித்துமுழக்கிய
கீதத்தாதி மனத்திசையுத்தம
தேகச்சோதி யொளிப்பிரபலித்திடு மலர்பாதா
வாசக்கேவல முத்தியணைத்திடு
தாகப்போக மனுக்கிரக முற்றிடு
வானத்தூடு சமசரணத்தினில் வருமாலே
வாழைத்தாழைக் குலப்பலமொய்த்திடு
வேலைப்போல்நதி யுற்றுவளைத்ததில்
வாழ்வுற்றேவரு கச்சிநகர்ப்பதி பெருமாளே.

இராகம்,—எதுகுலகாம்போதி] 6. [தாளம்,—சதுர்ஸ்யஜாதி திரிபுடை.

நாலுசங்க மூலமாதி சீலமுந்த நாலுதானம்
காடியன்போ டாசையாலும் நலமாக
நாளுமின்சொ லேகுலாவி மீளவஞ்ச மேவியேகி
நாடியிலங்க வேகொடிய மதனனும்
காலனஞ்ச மாரனோடு சோலியங்கி லாதகோல
காவலஞ்சி நேசபூசை தினமானங்
காதலன்பி னூலும்நாடி போதமிர்த வாலசயாலும்
காவலன்ற னீள்பதாதி துதியாலும்

சாலவின்ப மோடுகூடி மூலமந்தி ராதியாலும்
தாகமிஞ்ச நாளுமோதி யடிபேணி
சாதனங்க ளாகிலோக நூதனங்க மோடுகூடி
சாரசங்க போகவேலை யதின்மூழ்கி
ஆலமுண்ட யீசனை காளகண்ட னோடுகூட
ஆதியந்த மாலும்வேத மறையோனும்
ஆவியஞ்சி நாணியோட காவியங்க ளோதிசோதி
ஆதியங்க ளோடுகூடும் பெருமாளே.

திருப்பரம்பா புரம்.

இராகம்,–கரகரப்ரியா.] 7. [தாளம்,–சதுர்ஸ்யஜாதி திரிபுடை.

கனம்பால் குடம்போல் வருஞ்சீ தளஞ்சேர்
கதம்பே யணிந்த முலைமீதே
கலந்தேயணைந்தும் பரிந்தேயுழண்டுங்
கனிந்தூடு வந்து கருவூறி
மனந்தாளி னொந்தே பிறந்தே கிடந்தும்
வளர்ந்தே தளர்ந்து பிணமாகி
மகிழ்ந்தாசை யும்போய் சுடுங்கா டுறைந்தே
வருஞ்சாம்பல் மங்கி யலைமூழ்கி
தினந்தோறும் வம்பே தரும்பா மூடம்பே
சிதைந்தேக வந்த னருள்தாராய்
திறம்பார் புகழ்ந்தே வருந்தேவ சந்திர
செழும்போ துகந்து வருவோனே

அனந்தா சுகந்தா வரந்தா மிருந்தே
அலங்கார வின்ப மனையேதா
னறஞ்சேர் குருந்தா பரம்பா புரஞ்சே
ரமந்தே யிருந்த பெருமாளே.

இராகம்,–நாதநாமக்ரியை.] 8. [தாளம்,–அடதாள சாபு.

மணிக்கும்பந் தனக்கின்பம் வளர்க்குங்குங் குமப்பங்கம்
மணக்குங்கிம் புருக்கொங்கை மடமாதர்
மயக்கங்கொண் டலைப்புண்டும் மலைப்புண்டுந் தொலைப்புண்டும்
மறிப்புண்டுஞ் செறிப்புண்டும் பலநாளும்
பிணிப்பங்கொள் சிதைந்தம்பிற் மிகைதொந்தம் வசைப்பந்தம்
பிதற்றுந்தம் மதத்தொந்தம் பிரியமாகி
பிழைக்குஞ்சங் கடந்துன்பம் பிரிக்கும்பங் கயந்தொந்தம்
பெலக்குந்தன் பதத்தின்பந் தருவாயே
வணக்கம்பங் கணைப்பண்டும் பிணக்குஞ்சென் டனத்துண்டன்
மகத்தொங்கள் வதப்பங்கன் எனையேதான்
வழக்கங்கொண் டெனக்குந்தன் மனத்தின்பம் பெறக்கொண்டும்
மகத்துவந்தந் தருச்சிந்தை யுதவாயோ
குணத்தந்தன் கெணத்தொந்தன் குறித்தெந்த னிடத்துந்தன்
குடிக்கொண்டுங் களிப்புண்டங் குணநாதா
குதர்க்கங்கள் சிதர்க்கங்கொள் குணச்சந்திர னெழிற்றந்திரன்
குலச்சுந்திரன் நலத்தெந்தை பெருமாளே.

களசை.

இராகம்,-நாட்டை.] 9. [தாளம்,-சதுர்ஸ்யஜாதி திரிபுடை.

முப்புவி யுணர்மதி சுப்பிர மணியென*
முத்தியி னுறைபவ னடியேதான்
முக்கிய முட்டனனு பக்குவ வியல்பொடு
முற்றிலும் நினைபவர் செயலான
துப்புடை யுணர்மதி ரப்பிய நெறியென
சுத்தமுநிதி தலை வனுமாகி
சொற்கடி தடவுடன் புக்கிய வனிதையர்
துத்திடு மதிசுக மிகமூழ்கி
செப்புமொ டனுசுகி யுத்தரு நரபதி
திக்கிரி யரசரு மவராகி
திக்குடை புடவியும் புக்கனு பவமொடு
நிர்த்தவ முடனிரு வினையாரை
அப்புறம் விலகிடு விற்பன னெனவரு
மச்சுத வரனென வழகாகி
அர்த்தியி னடைதிரு வுற்றிடுவெளநக
ரக்களசை யினுறை பெருமாளே.

இராகம்,-ஆனந்தபைரவி.] 10. [தாளம்,-சதுர்ஸ்யஜாதி திரிபுடை.

கொடாம லொருகாசும் விடாம லொருநாளும்
குரோதமெனும் லோப மதனாலும்
குணத ரமுமாயு மனுதி வெறியாயுங்
கொடாத வினைபாவ முடனாலும்

---

* சாகாரஞ்ச நிராகாரம் சுத்தஸ்படிக பிம்பவதுகிரியை.

அடாத பலநோயும் விடாது பலநாளு
மதா கதாமுமாகும் பெருவாழ்வும்
அதோகதியி லேகும் விருதா செனனமாகு
மகாபரம லோபம் படிகாணும்
கெடாத சுகமீயுந் திடாகம புராணங்
கிரமாதிபல வோதும் மனமார
கிருபாகரனு மாகும் விருதாதி கனுமாயுன்
கெணுதி பதியாமுன் னிருதாளை
விடாமலொருநாளுங் குடோர வினையாவும்
விலாகிடிட வோடும் படிதாராய்
விசார நெறியாலும் உசாவு பல்சீலம்
விசேஷபத மூலம் பெருமாளே.

கிரி.

இராகம்,—ஆனந்தபைரவி.] 11. [தாளம்,—சதுர்ஸ்யஜாதி திரிபுடை.

கமலத் திடைபுக் குமுதத் தினைமட்
கமடக் கலையு மதிவீரா
கலவிக் கினியக் குலவுப் பருவக்
கலதிக் கொடுமை யடியூடே
சமரிற் பொருதிப் பவமற் றனையுட்
சதிரிற் கடுகு பொடியாடி
சகமத் தனையுட் புகுமுற் றறிவர்
சரசற்குண பொன் னெயில்வாழ்வே

சுமைவிட் டணிபெற் றவிலப் பிறவிச்
சுழலத் தலைபட் டுழல்வேனோ
சுமுகச் சுமுகச் சுகமுற் றிடுபொற்
சுருபத் துருவை யருள்வாயே
அமலக் கமலப் பொழிலுற் றிடுநற்
றமரர்க் கினிய வழகான
அமரர்ப் பதியொத் திருநற் கிரியுற்
றமரர்க் குறிய பெருமாளே.

இராகம்,—கமாஸ்.] 12. [தாளம்,—சதுர்ஸ்யஜாதி திரிபுடை.

கோலமத சத்தி மாலைதனி லுற்று
கோபமுடன் விட்ட கணையாலும்
கோதையர்கள் சித்த வாதைவலை யுற்று
கோமள மிருத்த முலைமீதே
சாலவனை யுற்று மாலது பெருத்த
சாகர சுழற்சி மிகமூழ்கி
சாமளவு மெத்த காமுக மடுத்து
சார்பு நிலையற்று முழல்வேனோ.
வேலைபவ துக்க சோலையொரு மிக்க
வேர்களை யறுக்கு மதிவீரா
வேதமுறை யிட்ட சாதனை மிகுத்த
வீறருண தத்துவ நிலைதாராய்
காலனை யெரித்து நாலுமுக முற்ற
காவலனே சித்தி மணவாளா
காதியை யறுத்து சோதியொளி பெற்று
காமனை யெரித்த பெருமாளே.

திருத்தீபை.

இராகம்,—சங்கராபரணம்.] 13. [தாளம்,—சதுர்ஸ்யஜாதி திரிபுடை.

குலவு குங்கும மஞ்சள் நீடிய
முலைசிறந்து வடங்குலாவிய
கொடுமை யங்கச னன்புகூடி வளர்ந்துமோகக்
குலை யடர்ந்து கிடந்த வாள்விழி
நிலை பொருந்திய திங்கள் மாமுக
குமரி செம்பவ ழந்தவாயித ழுண்டுநாளும்
உலை யழுந்தி வருந்தி நீரென
யிலகி னைந்து பரந்து வாடியே
உழுதி யெங்கு தயங்கவும் படி விண்டுயானு
முழல னிஞ்ச தனங்களா மிவ
ளழகு சுந்தர விந்தை மாமல
ருதவு மெந்தை யெம்பி ரானே யனந்தஞான
தலை யடந்தரு கந்த னுதனே
பல கணங்கள் வணங்கு நீதனே
கருணை சங்கத சம்புவே சிர வும்பர்கோவே
கதி கடந்தரு ளின்ப நாதனே
மதி சிறந்தொரு வஞ்ச மாரனை
கடி திகழ்ந்தனை கேது சூரிய ரிந்துகோடி
உலவு துங்க விதங்களா லொளி
நிலம் விளங்க வரும் பிரகாசனே
உசித மிஞ்சியே வந்து தீபையி னின்றகோவே
உறுதி கொண்டுனை வந்த னுதிகள்
நிறைய முந்த வணங்கி னோர்களை
உனது வங்க மதங்கள் வைகுவை தம்பிரானே.

இராகம்,-ஆனந்தபைரவி.] 14. [தாளம்,-சதுர்ஸ்யஜாதி திரிபுடை.

சிநவர னடியே யனுதின முடனே
செயசெய வெனவே மனமார
செயலடை வுடனே பயநய குணமே
செலமலை யசைசமே சருவூடே
வருமல ருடனே யுணி சதகமுமே
வகைபல முடனே மணிதீபம்
மணமகிழ் மடவா மெனுமொரு புகையே
வரிசை யொடுடனே யடைவூடே
தினதின தினமா மனுதுதி சதமே
திறமுட னடைவே மொடியாடி
செபதப மதனே சுபமன துடனே
செபியிடில் வினையே யடியூடே
முனைகெட வுடனே கனநிச சுகமே
முழுகுவை மனமே யுனதாணை
முடிசுர ரடியே படிதுதி யிடவே
முதமிக மலரே பெருமாளே.

திருப்பேராவூர்,

இராகம்,-கரகரப்ரியா.] 15. [தாளம்,-சதுர்ஸ்யஜாதி திரிபுடை.

சிரித்துமாமய லைத்தரு பொட்டியர்
மதத்திலாவெகு சர்ப்பனை யுற்றவர்
தெருக்கள்மீதி லருக்கி நடப்பவ ரதிமோக

சிறுக்கியாயி வித்தைகள் கற்றவர்
வனத்து மான்விழி யிட்டுமெருட்டியள்
திகைக்கமாய மருத்திடு துட்டியள் பரமாதர்

பெருத்தமாமுலை யைக்கொடு விற்பவர்
மதத்தினல்விட ரைக்குடி சுட்டவர்
பிரசித்த மாய்குண மற்றகடைச்சியர் பலனளும்

பிணத்தின் மேல்விழு குட்டைகலக்கிய
ளொருப்படாதம னத்தை யுருக்கியள்
பிழைச் சொலேமொழி முற்றுமுரைப்பவர் பணமீதே

கருத்தினலொரு செத்த பிணத்தினை
யிழுப்பிலாம லணைக்கும் பற்றியள்
கனக்க வாடை மினுக்குமுகத்திய ளவரோடுங்

களிக்குலாவி யணைக்கு மவத்தனை
யடுத்துனதா பத்தி யொழித்தனை
கழுத்தவாழ்கரத்தினி லுற்றிடு முனிவோனே

திருத்தமாமன மொத்துனை நித்தமும்
நினைத்தபேர்தனக் கிஷ்ட மளித்திடு
திறத்தனேகரு ணைக்கட லத்தனே சினநாதா

செழித்தமாமுனி சித்த மெனத்தகு
புகழ்ப்பிரகாச நகர்க்கிசை யுத்தம
திருப்பேராவூரி லுற்றிடு பத்தர்கள் பெருமாளே.

இராகம்,—கரகரப்ரியர்.] 16. [தாளம்,—சதுர்ஸ்யஜாதி திரிபுடை.

சீதமாமதி யொத்த முகத்தியர்
போதவாள்விழி யிட்டு மெருட்டியள்
தேசமே விலையிட்ட முலைச்சியர் மதனாலே

தீரவோதி முடித்த சமத்தியர்
பாரமாமுலை மெத்த வனுக்கியர்
சேருமாய வலைக்கு ளொடுக்கிய — ரதிமோக
காதலாலறி வற்ற குணத்தரை
யாதியோடு பொருட்பறி கற்றவர்
காசிலாளரை வெறுத்த கடைச்சியர் — கனிவாயின்
காமமாய்மிக முத்த மளிப்பவர்
சாமிநீயென பட்ச முரைப்பவர்
காமராச சமத்த னெனத்துதி — கலையாடி
போதமேல்விழ முத்து கைச்சியர்
மீதுதாடன வுச்சி படைச்சியர்
போகசாகர மத்தில் முழுக்கிட் — டழிவேனோ
பூரணாசிந சித்தம சித்தனே
காரணாகரு ணைக்கட லத்தனே
போதியாலுயி ருக்கொரு கர்த்தனே — எனையாளாய்
நாதனேயரு கத்பரி சுத்தனே
கீதநாரதர் நற்றுதி பெற்றனே
நாளுமேதய வுற்ற கருத்தனே — பரமேசா
நாதமோடு முனைத்துதி பத்தரை
யாதியான யதத்தை யளித்துட
ஞாறுமா மலருத்து நடத்திய — பெருமாளே.

ஆலேயம் பதி.

இராகம்,-சங்கராபரணம்.] **17.** [தாளம்,-சதுர்ஸ்யஜாதி திரிபுடை.

வேத மந்திர சொரூப நமோ நம
நாத சுந்தரசாதா நமோ நம
வீறுபங்கச பாதா நமோ நம பரலோக
விடுகந்திடு மீசர் நமோ நம
யீடழிந்த பிரானே நமோ நம
வேகபந்த விநாசா நமோ நம சதகோடி
சோதி சந்திர தேசா நமோ நம
சாதிதொந்த மடர்தா நமோ நம
தோஷமங்கு குலேசா நமோ நம அனுராக
தோகை வங்கணமோடி நமோ நம
வாகு மங்குசதுளி நமோ நம
தூபகந்த சுபாதா நமோ நம சிநதேவா
சாதுசங்கர சாமி நமோ நம
நீதியந்த நிமாலா நமோ நம
சாரமந்திர பூரா நமோ நம குருநாதா
சாது குந்த மிலாதா நமோ நம
வீவு மந்திரசாரி நமோ நம
சாகசம் பெறுசூரா நமோ நம எனையாளும்
ஆதி நன்கருணாளா நமோ நம
தீதுவஞ்ச விரோதி நமோ நம
ஆகமப் பொதிஞாதி நமோ நம திருநாம
மாயிர யிருநாலா நமோ நம
சியமுந்தணை யானே நமோ நம
யாலேயம்பதி யானே நமோ நம பெருமாளே.

இராகம்,—ஜெயந்த ஸ்ரீ.] 18 [தாளம்,—சதுர்ஸ்ய ஜாதி, திரிபுடை.

இருவினைக ளீட்டி மருவியிடு கூட்டை
இனிதுறவு மாட்டி மகிழாதே
இணைமுலைகள் காட்டுந் துணைவிபுற வாட்டை
எளிதெனவே நீட்டி யுழலாதே
துருமனிதர் கூட்டை பெரிதெனவே யாட்டி
சுழலுமிடு பாட்டை யிசையாதே
துயர்பிறவி காட்டை உயிரனலை மூட்டி
சுடுவொழிய வாட்டி விடுசால
பரமனிட பாட்டை மருவுமன நாட்டி
பலதுதிக ளாட்டி நலமாக
பழையவினை யோட்டி யழகுசுர னூட்டிப்
பதவிதனில் மூட்டி சுகமேவி
பெருமையுள மாட்டி கருணைவடி வாட்டி
பெரியநிலை யாட்டி யுடனாளும்
பிணையலொடு கூட்டி யணையமகி ழாட்டி
பிரபலசுக மூட்டும் பெருமானே.

மோதைமானகர்.

இராகம்,—கரகரப்ரயா.] 19 [தாளம்,—சதுர்ஸ்ய ஜாதி, திரிபுடை.

பாரமாமத னுற்று கறுப்புறை
சோதியாமொளி யிற்தனு வைக்கொடு
சீதமாமல ரிற்கனை தொட்டவ னதிகோப

பார்வையா லெனைமெத்த வருத்தவு
மாவியோட்டி யினைத்து கருத்துகள்
சோரவாட்டி மயக்கி விழிக்கவு மினிதாமோ

கோரபாத வினைப்பகை பட்டிட
சாடிமோதி யெரித்த சமத்தது
நாலுவேத நிதிக்கட லுத்தம நெடியோனே

கோலவீரிய சத்தி மிகுத்திடு
பூரணாகம முற்றும் விதித்தனே
ஞானகாரண கர்த்த னெனைத்தய வருள்வாயே

ஆருமேயிலை யுற்ற துணைக்கினி
நீயலாது மொருத்த ரெனக்கரு
ளோதுபூர தயத்தரு கற்பக தருவே நீ

ஆதிநாயகநற்ற வருக்கொரு
பாழிலாத பதத்தை யளித்துமோர்
சாதிநாலையு மிற்று விழப்படி பொருவோனே

வீரசேக ரறப்பதி யுத்தம
காரணகரு ணைக்கட லத்தனே
சாமிமேவு லகுக்குமோர் சுத்தனே சருவேசா

சேலவாளை குதித்த கயத்தொடு
வாவிசூழ்ந் ததையுற்று வளைத்திடு
மோதைமா நகரப்பதி யுற்றிடு பெருமாளே.

கரந்தை.

இராகம்,-சுருட்டி.] 20. [தாளம்,-சதுர்ஸ்யஜாதி, திரிபுடை.

ஆதிபரன் சிரநாதன் மொழிந்திடு
கூறாரவ மானமு முடனேதான்
கூடிட மிஞ்சிய மூட மெனும்படி
கூரறி வின்கன மெனமாயாய்
நீதமலன் பில வாதொரு சங்கையும்
நீறுட னுன்படி யுடனடி
நேசமுடன் சிர ராசனை யன்பொடு
நீதினமுங் கொடு தொழுதேகி
ஆதர மிஞ்சிய சோதி வளங் கொளி
யாகி சிரன் பத மொடுசேராய்
ஆனபெரும் புகழ் சோனை நிரம்பிய
ஆதி கரந்தையின் பெருமாளே.

தாசை.

இராகம்,-ஆனந்தபைரவி.] 21. [தாளம்,-சதுர்ஸ்யஜாதி, திரிபுடை.

பட்டத்து ராச ரவ ராலும்
பட்சச் சுரேசர் துதி யாலுங்
கெட்டுக் கெடாத நவ ராலுங்
கீச்சுற்று நாகர் குல மாகும்
சட்டித்து நாலு முண காணே
தக்குற்று நாளும் பணி பாதா
எட்டிக்கிலு மோசை பெறு தாசை
இச்சித்து வாழும் பெருமாளே.

இராகம்,-தேசிக தோடி.] 22. [தாளம்,-மிஸ்ரஜாதி, ஜெம்பை.

செகமதனிலே துதிக்கும் பகவசிந நாதநித்தன்
செயல்கருணை யாதியத்தன் பரமேசன்
திருவடியை யோதிநித்தன் பரிவுடனே கூடிசித்தம்
செயசெயனவே துதித்தும் மனமார
வகையுடனே கரித்து முகமையுட னுசரித்தும்
வதைபொய்யுட னேதுகுற்ற மணுகாமல்
மறதியிடு காமதத்தை குறைகளவு மாரவத்தை
மமதையுடனே கெடுத்தே யறிவாலும்
விகடகவி யாகமத்தே பகடியுடனே கெடுத்தே
விடுகூரத லோபமற்றே யொடுமாயம்
விசயமொடு மானமுற்றுந் திசைகெடவே சாடியிட்டு
விரதபல சீலதத்துவ முடனுடி.
சுகதரவிலாச முத்தே யிகபரம சாதனத்தே
துரிதமுடனே திருத்தே சுராசன்
சுருணனுட கேவலத்தே அகமகிழ வாழ்வுபற்றே
சொலவரிய சோதியுற்ற பெருமாளே.

செஞ்சி.

இராகம்,-கமாஸ்.] 23. [தாளம்,-மிஸ்ரஜாதி, ஜெம்பை.

பாரதனங்கொடு கோல மடந்தையர்
பாக தரந்தரு பரிவாலே
பாசமழுந்திய தோதக மிஞ்சியே
பாவி யனங்கனெய் கணையாலும்

சேரவணைந் தவரோடு மனங்களி
தீர மயங்கொடு மடியேனை
தேஹுதலன்பொடு ஓதி மனங்கொடு
சீர்பத முந்தவு மருள்வாயே
கோரநெடும் பவரோக விஷங்களை
கூச விடும்படி முனிவோனே
கோமளகுங்கும வாச மிலங்கிய
கோதை யிளம்பிறை யெனுமோக
பூரமடந்தையர் காதலை வென்றருள்
பூரண புங்கவ முதலோனே
போதநெடும்புக ழாகிய செஞ்சியில்
பூமிசை வந்தருள் பெருமாளே.

இராகம்,—தோடி.] 24. [தாளம்,—சதுர்ஸ்யஜாதி, திரிபுடை.

அத்தமாடைக்குலவு ரத்தின சொப்பணிதி
அர்த்தி மாடத்தணுகு முயர்கூடம்
அப்பை யாவுக்களவு செப்பு பாரத்தனதி
அச்சுமா தர்த்துணைவி யவரோடு•
சுற்றமோகத் துணைய ரத்தைமா வித்தலைவர்
தொப்பை யானைப்புரவி திறமாவுஞ்
சுட்டபாலிற்சமைய விட்ட சோறிற்கறியுஞ்
சொக்கமீறத் தினமு மடைவூடே
உற்றுபோசித்தளவு மெத்த காமித்துமன
மொப்பி யாசைக்கொடுமை மயல்மூழ்கி
உப்பு தீமைக்கடையன் தப்பணுதிச்சுடிய
னுக்கிரபா விப்பழிய னெனையாளாய்

நித்தமோதிப்பணியும் பத்தர் சாதிக்கருளே
நிற்பராதிப் பொருளே திருமார்பா
நிச்சலாதிச் சிநனே உச்சலோகத்துளனே
நித்த ரூபத்தவனே பெருமாளே.

தச்சை நகர்.

இராகம்,-பியாக்.] 25. [தாளம்,-மிஸ்ரஜாதி, ஜம்பை.

மெத்தவரு நோய்தீமை யுற்றுமெனையே கூடி
வெற்றிகெடவே மாதர் மயல் மூழ்கி
மிக்கபணிநீர்வாசம் வைக்கு முலைமேல் நீடி
மித்திர முடனே யாடி யுழல்போதில்
பெற்றசுதர் தாய்வீடு சுற்றமொடு மாமோக
பித்தவலை பேராசை மயலேதான்
பிக்குவகை மோகாதி சிக்கில்மிக ஞானசை
பெற்று மனமேயூடி நாகேகி
சத்துமுயி ரோயாத வத்துயரிலே வாடி
தத்துழலவே யோடி தினமானஞ்
சற்குண தயாதார விக்கிரம நிராதார
சக்கிர தலைவாவேத சருவேசா
நித்த முனையேநாடி அர்த்தியுடனே பாடி
நித்த சுகமேதேடி முனிவாழ்வே
நிச்சவிலாசாதி தச்சைநகர் வாழாதி
நித்த கல்யாண நம் பெருமாளே.

இராகம்,—சங்காபரணம்.] 26. [தாளம்,—சதுர்ஸ்யஜாதி, திரிபுடை.

அம்புய மீதினி லேறிலங்கிய
சம்பிரமபாத தலத்தையன்புடன்
அண்டியெனுளு மிகத்துடங்கியு மடைவாக
அங்கமும் வாசக சுத்தமும்மன
துங்களிகூடி பசித்துரஞ்சித
அஞ்சலியாலு முடித்துசந்தத மழகாக
இன்புறவாடி மனத்து மிஞ்சிய
ரம்பியஞான முதிங்க ரங்கசன்
இங்கித பாண மதைக்கடிந்துட னெதியாகி
இந்திரியாதியடக்கி மண்டிய
முந்தியகாதி விடக்கடிந்துட
னின்பமுமாக சுகத்தடர்ந்திடு பதமேவி
எம்பெருமா னுடனித்த னந்தனுஞ்
சப்புசிநேச னெனத் திருந்திய
எந்தையேயாகி யெனைத்துலங்கவு மருள்தாராய்
இங்கினியானு முனைப் புகழ்ந்திட
நங்கருணாகர முற்றுணர்ந்திடு
எங்குலனாத செகத்திரயம்புகழ் பரமேசா
நம்பினனே யுனை மெத்தவும்படி
யும்பரிநாளள வத்தசுந்தர
நஞ்செனும்நாலு கதிக்கடந்திடு மருகேசா
நன்கலைவாணி சிறக்கவுந் திகழ்
பங்கயபாத பரப்பிரமமெனும்
நங்களைநாளு மடுத்து ரட்சியும் பெருமாளே.

விழுந்கம்.

இராகம்,—ஆனந்தபைரவி.] 27. [தாளம்,—திரிஸ்ரஜாதி, ரூபகம்.

சிநராச மகேசு னுரைக்கும் படியான
திருவாய் மொழியோதி நடக்குங் குணமேதேர்
கனஞான விலாச மனைத்து மினிதான
கருணா கரமான வொழுக்க மவையூடே
இனிதாகிய தோர்பத பத்தும் பலநாளும்
எழிலாகிய நீதி வணக்க மொழியாமல்
அனைவோர்களும் வாழும் விழுந்கம் பதிமேவி
அரியாசன மேவி யிருக்கும் பெருமாளே.

இராகம்,—ஆனந்தபைரவி.] 28. [தாளம்,—அடதாள சாபு.

தோகையர்க் கிசைந்த பாகுசொற் குகந்து
சூழ்மயக்க முந்த வணுகாதே
சூதுகற் றிலங்கு வாதையிற் றுறந்த
தூய்மையைக் கடிந்து முடுகாதே
தாகமுற் றனந்த ஞகமத் திருந்த
சாரசத் தமர்ந்து முயலாகி
தாலமிற் றிலங்கு மானமிக் கடங்கி
சாலதுற் குணங்க ளடியூடே
போகவிட் டுயர்ந்த சோக முற்றிருந்த
போதியைத் திருந்த வுடனேதான்
பூசையைச் சிறந்து தேசுசொற் பரந்து
பூசலத் திருந்து புகழாகி

யோகமுற் றிலங்கு யேக சித்தமங்கு
லோடுபெற் றுலங்க வருள்தாராய்
ஊழிகூற்ப மந்த வாழ்வு பெற்றுயர்ந்து
ஊர்வியிற் சிறந்த பெருமாளே.

ஓம்புசம்.

இராகம்,-கரகரப்ரியா.] 29. [தாளம்,-சதுர்ஸ்யஜாதி, திரிபுடை.

கோலபங்கயமீதே யேறிய மூலசங்கர தேவேயானுனே
கூறவும்படிதானே நாடொறு மறியேனே
கோதை வங்கணமீதே தோதக லாதைமிஞ்சிய காமாராசமுங்
கோடுகொங்கை யினூடேகூடிடு மனுபோக
வேலையன்பொடு கோலாகாலமும் லீலைசந்தத மாறுதாகமு
மீளவுங்கல வியாதோயவு மினிதாமோ
வேதமந்திர நாதாபூரண பாதபங்கச சாமிகாரண
வீறுசுந்தர தாதாமாதவ ரனுகூலா
ஆலமுண்ட பிரானுராமொரு வாலசந்திர சடாதாராயினு
மாசையன்புட னேகாடியு மனுகேனே
ஆழியங்குறை மாயானுமொரு ஏழையம்புச னுபானுமவ
னுதரங்கொடு யார்தானேதுவ ரனுகூலம்
சாலவாதனே போலேநீதொழி சீலமந்திர மாலேயீசனுஞ்
சாதுபங்கய மீதேயாதனு மெனும்நீயே
சாமிசம்பு சகாயாசாரச நேமவோம்புசவாசா கோமள
சாரசம்பிரம தேசாதேவர்கள் பெருமாளே.

இராகம்,-செஞ்சுருட்டி.] 30. [தாளம்,-மிஸ்ரஜாதி, ஜெம்பை.

பெரிய குலந்தரித்து மரிய வுடம்பெடுத்தும்
பெறுகதியுங் கெடுத்து மலையாதே
பிறவுட னறிவழித்து மறநெறியு மொழித்து
பிழைமுழுதும் பெருத்தும் விழியாதே
திருவறமும் பெருத்து மருகசினன் பதத்துந்
தினதினமும் படித்து மிலிதான
செயலுடனுங் கனக்கும் பயநயதின் பெருக்குந்
திறமுடனுந் துதிக்கு மழகாகி
வருதிருவு மடுத்து சருவலுறுங் கனத்து
வளமை யுளஞ்செழித்து மிகநாளும்
மதனனெனும் பிறக்குஞ் சுதர்களுடன் களிக்கும்
வனிதையரு மிணக்க முடனுவர்
சுரபதி யெந்தனத்தன் திருமறு மங்களத்தன்
துயரொடு சுந்தரத்தன் சிநராசன்
தொழுபத பங்கயத்தன் பழுதில துங்கசுத்தன்
சுகநிலை யந்தரத்தின் பெருமாளே.

இராகம்,-கரகரப்ரியா.] 31. [தாளம்,-சதுர்ஸ்யஜாதி, திரிபுடை.

தோதக மிஞ்சி யிணங்கு வஞ்சியர்
சாதனை யங்கு ளிசைந்த நெஞ்சியர்
சூதுகள் முந்த வடர்ந்து கொஞ்சிய ரவரோடுஞ்
சோடு நடந்து வுழன்று வம்புக
ளோடு மிருந்து வுறங்கி யண்டியுந்
தூறுகளுண்டு சுழன்று சிந்தையின் தடுமாறி

காதலே மண்டி யலைந்து குங்கும
 சீதள கொங்கை யணைந்து ரஞ்சித
 காம மடங்க முயங்கிடுங் கடை யனையேதான்
காசினி யெங்கும் விளங்கவும் படி
 ஓசை யுடன்தய சிந்தை யன்புடன்
 காமனை வென்ற திறம்பெனும் படி யருள்தாராய்
நீதி நிரம்பி யிலங்கு சந்திர
 ராதி யுயர்ந்து பரந்து சுந்தா
 நேச ருகந்த சுகந்த பங்கய பாதநாதா
நேம மிகுந்து விளங்கு சங்கர
 சாமி யனந்த குணங்கள் மிஞ்சிய
 நேச மடர்ந்த துறந்த ரந்தரர் பணிபாதா
ஆதர வெங்கு மடங்கு மெந்தனை
 நீதிய முந்த வழங்கி யங்கிடு
 ஆறு மதங்க ளிடங்கொ ளும்படி. யருளாளா
ஆவி யடங்கி யிறந்த பின்பொரு
 பாவி யுடம்பு துடங்க லின்றியுன்
 ஆதர வங்க மிலங்க வன்புறு பெருமாளே.

விதுரை.

இராகம்,–ஆனந்தபைரவி.] 32. [தாளம்,–சதுர்ஸ்யஜாதி, திரிபுடை.

காதி வினை கெடுக்கும் படியாலே
காலனழ வுதைக்கு மதிவீரா
சோதி யொளி சிறக்குந் திருமேனி
சுவாமி கதிகடக்கும் புனிதேசா

நீதியறம் விளக்கும் முனி நாதா
நேச முட னுயிர்க்கு மருகேசா
சாதி குல மொழிக்குஞ் செகதாதா
சால விதுரை யிருக்கும் பெருமாளே.

சிராவண பெளிகுளம்.

இராகம்,—சங்கராபரணம்.] 33. [தாளம்,—சதுர்ஸ்யஜாதி, திரிபுடை.

அமரரு மருமறை முனிவர ரறிவரர்
திமிரதி தினகரர் சசிகர ரொளியவ
ரகிலதி நரவரர் பலபல வகையவ ரவர்கூடி
அதிவித மொடுதுதி பலசக சிரமொடு
யெதிவர சமசர ணெடுவரு மருகனே
அறிவுட னனுதின மனமதி விடுபவர் குலநாதா
உமைபதி யெனுமொரு பிறைமுடி சடையனுங்
கமலம தனுபவ தயனொடு முரகரி
யொடு மவரடியவர் துயர்கெட வுரியவ ரலவேதான்
உலகுள பொருளையு மறிவுட னுணர்மதி
கலைபல வருள்மொழி யுரைபல சதுரனே
உயர் கதியுடையனே சுகமிகு கடவுளே உனைநாளுந்
கிரமமுட னுனதடி மலர்களே கதியென
அமலனே யனுதின மலர்கொடு பணிபவர்
கெடு மதிதனை விடு பருள் மதியுடையனே-எனையாளாய்
கிலெச மொடுயர்பவ சரதியை முனிவனே
நிலை திருவறமொழி யுரையுள பரமனே
கணதர குணதர தயவர சுரவர னெடியோனே

நமர்பிற ரெனுமிரு நினைவது விடுவனே
கமலம துலவிய சதுமுக முடையனே
நலமிகு வதரொழி யருளொடு புரிவனே சிநராயா
நகையொளி விகசித மதிமுக சொருபனே
புகழ் பெரிதுடனுள பெலம்புய மதிகனே
நலமுள 'பேளிகுளபுரம்வரு கிரியுறை பெருமாளே.

இராகம்,–எதுகுலகாம்போதி] 34. [தாளம்,–சதுர்ஸ்யஜாதி, திரிபுடை.

அமரர்கள் சுத்திப் பரந்து கொண்டொரு
சம சரணத்துத் திரண்டு விஞ்சியே
அதிசய மத்தைத் துடங்கி யன்புட னழகாக
அகமகி ழுற்றுப் புகழ்ந்து சந்ததம்
வகைமலர் மெத்தப் பொழிந்து யிங்கித
வழகிடை யிட்டுத் துடர்ந்த சங்கித முடனேதான்
திமிதிமி தித்தித் திமிந் திமிந்திமி
டுமுடுமு டுட்டுட் டுமுண் டுமுண்டுமு
திகுதிகு தித்தித் திகுந்திகுந் திகு வெனவேதான்
திரமுட நிர்த்தத் தடர்ந்த சம்பிரம
முறைமை மெசித்துத் துகந்து கொண்டருள்
சிநவர சித்திப் புணர்ந்த சுந்தர வடிவோனே
எமதிட முற்றுக் களங்க மிஞ்சிய
நமனை முடுக்கித் துடர்ந்து வஞ்சிட
எழில்வர மிக்கத் தரும் பெருந்திரு மறுமார்பா
இறைவனே யட்டக் கணங் குணம்பெறு
சருவ வுயிர்க்குச் சிறந்தனன் தய
யியலுள சத்திப் பொருந்தி மண்டிய பிரதாபா

உமதிட முற்றுப் புகழ்ந் துகந்துடன்
சுமதியி லுற்றுத் திணங்கு மன்பரை
உயர்கதி யுய்க்கப் பொருந்து மந்தர மகதேவா
உலகுணர் சத்திப் படர்ந்த புங்கவ
பலபல வித்தைக் கிசைந்த நம்பர
னுணரறி வுற்றுப் பெருந்து மெந்தையே பெருமாளே.

இராகம்,—கமாஸ்.] 35. [தாளம்,—சதுர்ஸ்யஜாதி, திரிபுடை.

விரகமி ராப்பக லுருகி யுலாத்தியே
விலைபடு கூத்தியர் தந்தமோகம்
மிகுகன மாக்கிய சுகமலை யூற்றினுள்
விழுமதி நித்தனை எந்த நாளும்
திருவற மாற்றிய பறையனை வாட்டியே
செடில்நர கேத்துவை சொந்தமாக
தினதின மேற்றியே நினதடி போற்றிய
செயல்பிற மாக்களை யந்தமாக
சுரபதி யாக்கியே யிருவினை நீக்கியே
சுடரொளி யாக்குவை எந்தையே நீ
சுகுணகு ணுட்டிய செகதல காட்சிய
சுககதி யாட்சிய சம்புநாதா
புருபர மாச்சிந வரகரு ணுக்கடல்
புகழ்பெறு மாக்கடல் சுந்தரேசா
புவிமிசை பாக்கிய கவியிசை தேக்கிய
புகழ்தொறு பாட்டினிற் றம்பிரானே.

இறையூர்.

இராகம்,–கமாஸ்.] 36. [தாளம்,–சதுர்ஸ்யஜாதி, திரிபுடை.

ஒருநாளு மூந்த ளிருபாதஞ் சிந்தை
யுறநான் வருந்த வறியாமல்
உயர்மூட சிந்தை மயலான பந்த
முடலோடு சொந்த முழல்வேனே
பொரு மாரனேந்து சரமாலும் நொந்து
புகழ்மா தரிந்து நுதலார்தன்
புயமீ தணைந்து நயமாக நைந்து
பொடியா யிருந்து கெடுவேனே
அாணுகு முந்தன் சரணார விந்த
மதுதா னனந்த சுகமேகாண்
அலையா தலைந்து நிலையா திசைந்த
வனுபோக தொந்த மதுதீராய்
இரு நாலிகழ்ந்த புருநாத யெந்தை
இறையூர் மணந்த குணஞானா
இலியா னுகந்து நிஙதா ளிசைந்து
யிடுவே னமர்ந்து பெருமாளே.

வாழை.

இராகம்,–பியாக்.] 37. [தாளம்,–திரிஸ்ரஜாதி, ரூபகம்.

விட்டது பேராசை கெட்டுல காசார
மிக்க மகா ஞான விடமேவி
விற்பனனார் சோதி தற்பரனார் நீதி
மெய்ப்புகழ்னார் வீடு நிலைகாண

கட்டளை யாதார சுட்ட சிநநாதர்
கற்பித வாசார நெறியேகி
கர்த்தனை நேராக அர்ச்சனை யாராதி
கற்றொடு மாலாகி தினமானம்
அட்டமியோ டான பக்க முபவாசம்
அச்சுதனூர் பூசை தனையேதான்
அர்த்தி யோடேகூடி நித்த விரதாசார
மற்புதமா தியான பலமேவி
சுட்டுடனே காதி விட்டு மாராதி
சுப்பிர நிராகார வொளியாகி
சுத்த நிராதார நித்த நிராபாரத்
துக்கமிலா வாழைப் பெருமாளே.

இராகம்,-ஆனந்தபைரவி.] 38. [தாளம்,-சதுர்ஸ்யஜாதி, திரிபுடை.

கன்னியருட முலை வன்னமு மிருகயல்
கண்ணினின் வலைமயல் மிகவாகி
கன்னல தரரச மன்னியெ கருகியுங்
கண்ணோடு முகமதை யனையாடி
நன்னய மொடுகல வின்னிய லடைவுட
னண்ணிய விரகனை யதிமோக
நன்னறி கடையனை எண்ணமில் மடையனை
நண்ணியுடனே மன மகிழ்வாயே
சென்னியிலுனதடி யுன்னிய பிருமனை
திண்மையில் தயநய முடனுஞ்
செண்ணிடு மதனையும் வெண்ணிடு புயபல
திண்ணெழி லுடையனை எனையாளாய்

பன்னிரு கணமுனே உன்னியே தொழுதிடும்
பண்ணுள சமசரணத்தில் வாழ்வே
பண்ணவ சிகசிக தண்ணிய வருளுடன்
பண்ணிடு முனதுடன் பெருமாளே.

ஆரணி.

இராகம்,-சங்கராபரணம்.] 39. [தாளம்,-மிஸ்ரஜாதி, திரிபுடை.

அமரலோகனு ராட விமல வாணியார் பாட
அழகு மாரனு ரோட வதனேடே
அகிலதேசனர் கூட கதிகள் நாலுமீ டாடி
அதிக வேகமா யோடி யிடவேதான்
கமலவாகனர் நீடி சுமதி நீதியால் நாடி
கருணை கூடியே வாடி வரவேணுங்
கலககால னுயேனை யலைய நீடி வாதாடி
கடினபூச லாயாச மிடுபோதில்
உமது நீதி யாதார சுமதிஞான மேலான
உரைக ளோதி யீடேற வருள்பாராய்
உலக மேழு மாறுத பலசமோக மாசில
னுறுதி யாகவே சார மருள்வாயே
விமல கோமளா கார சமவசார ணதீர
விகித ராக ஞான கருணாளா
விசய சாகசா சூர புசபலாதி மாவீர
விதுர ஆரணி வாசப் பெருமாளே.

இராகம்,—ஆனந்தபைரவி.] 40. [தாளம்,—சதுர்ஸ்யஜாதி, திரிபுடை.

தொல்லை வினையாலும் முல்லை நகையார்தஞ்
சொல்லை நலமாக மிகநாடி
துன்னிமுலை மீதி லுன்னி யுறவாடி
துய்யமலர் சூடி முயலாமே
எல்லை யிலையான நல்ல சுகமாகும்
என்று மவரோடு விளையாடும்
எள்ளறிவி லானை கள்ள மனதானை
எவ்வகையி னாலுங் கரையேற
நல்ல ருளோடி அல்லல் பொடியாக
நன்னெ றியெனாளும் அருள்வாயே
நண்ணியுள சோதி புண்ணி யசுரேசர்
நன்மைசிந ராச முனிநாதா
வல்ல பனேயாதி செல்ல மதன்தூர
மன்னி யிடுகாதி யதிதூரர்
மண்ணரச ரோடு விண்ண ரசர்தானும்
மன்னியடி பேணும் பெருமாளே.

இராகம்,—கரகரப்ரியா.] 41. [தாளம்,—சதுர்ஸ்யஜாதி, திரிபுடை.

உயருடல் தனுவுக் கொக்க வளைத்துப்
புயபல மற்றுத் தெத்தி யிளைத்திட்
டொளிர்நய னத்துக் கட்டி மறைத்துத் தலைரோமம்
உயர்படி கற்றுக் கொத்து நரைத்துச்
செவிடுகள் பட்டுத் தப்புரை யிட்டிட்
டொருதடிப் பற்றித் தெத்தி விழித்துத் தடுமாறி

செயலழி வுற்றுக் கட்டுகள் விட்டுப்
பலமொழி கெட்டுக் கக்கல் மிகுத்திட்
டிறமையொ ழித்துச் சத்திகள் முத்திச் சளிமூடித்
திடு திடெ னக்குக் குக்கி முறித்துக்
கொலை யெமனுற்றுக் கட்டி யிழுத்துச்
செழுமுயிர் பற்றிக் கொண்டு தானிற்கப் பிணமாகித்
துயரொடு மக்கட் கதறி யிடத்தம்
மனைவிய ரொக்கத் தலையை விரித்திட்
டொலிகட லுக்கொப் பனைமுறை யிட்டுட் டழுதேதான்
சுடுமிட முற்றுக் கட்டையில் வைத்துட்
டழல்பல விட்டுச் சுட்டு விடுத்துச்
சுனைநதி புக்குச் சுற்ற முழுக்கிட் டதன்மீதிற்
பயனொழி மக்கட் பிறவி யனைத்துக்
கொருசக டொத்துத் திரிபவ துக்கப்
பகைவினை கெட்டுப் பொடிபடு சித்தத் தருள்தாராய்
பல்பல வர்க்கத் தொரு மொழி கற்பித்
தருளணி மத்திற் குடியினி லுற்றுப்
பலசுர ரற்றச் சிற்றிடு மருகப் பெருமானே.

குழைச.

இராகம்,—காகரப்ரியர்.] 42. [தாளம்,—சதுர்ஸ்யஜாதி, திரிபுடை.

சுருதியடங்க வுணர்ந்து டனுங்கொடி
யிருவினை யஞ்சி யிறந்திட வும்முடி
துருநய மங்கி யொடுங்கிட வும்படி யினிதாகி

சுகநிலை யங்கு விருந்த ருளுஞ்சிந
பகவனை யன்பு ளுகந்தி டவுந்திரி
வுலகுவணங்க வரந்தரு முன்குண முளவாகும்

அரியணை யங்கு ளமர்ந்தரு கன்புரு
பரம மகிழ்ந்த சிநந்த னெனுந்திற
லமரர் வணங்க விருந்துல கந்தொழும் அருளோனே
அதிமதி கொண்டு விணங்கி மகிழ்ந்தொடு
துதிபல சிந்தை யிலங்க விறைஞ்சிட
அசல னெனும்பொளி ரம்ப ரமந்தா நவைநாவை

தருமமடங்க விகழ்ந்தொரு வஞ்சனை
திரள்பல முந்த வுகந்து செயுங்கொடி
சடலனை துண்ட களங்க னெனும்பழி யுளமூடன்
சகலர் முனிந் திகழும்படி தொண்டனை
வகையுள தெண்ட விதங்க ளடர்ந்திட
தறிமுறி யங்க மொடுங்கொரு சண்டனை யொடுசாட

மருகி யலைந்து வுழண்டு துருங்கதி
கருதி விழுந்து வருந்திட வும்படி
வலதில் முனிந்த பரம்பர சுந்தர மகதேவா
மதுர முடன்தய விங்கொடு யெந்தனை
யிசமு மருந்தி யிடுங்குரு சங்கர
வரனே யுகந்து புகழ்ந்திடு மன்பர்கள் பெருமாளே.

இராகம்,—கமாஸ்.] 43. [தாளம்,—சதுர்ஸ்யஜாதி, திரிபுடை.

கருத்த குஞ்சியு மழகு மடங்கித்
திருத்த கண்களு முழியு மழுங்கிக்
கதித்த வங்கமுய் வெகுரை யங்குற் றதன்மீதே

கனத்தி ரும்பலுங் கிணுகிணு கிண்ணெண்
டினத்தி லுஞ்சின மிகவு மெழும்பிக்
கனக்க வுங்கலை வலியுமே மிஞ்சிப் பிணிமூடி
சிறுத்து யிந்திரியப் பலமு மொடுங்கிட்
டொறுத்த பெண்டுகள் தாயர் வருந்தித்
திருத்த வும்பல அவிழ்த மடங்கிட் டுயிர்போகி
திகைத்த லைந்திடு வசமழி பந்தப்
பகைக்க ழுந்திய பிறவியை நிந்திட்
டிருத்த முந்திய உனதருள் தந்திட் டருள்வாயே
அறுத்து மைங்கணை மதனையு மங்கிட்
டொறுத்து பொங்கிய கதிகளை நிந்திட்
டணைத்த வஞ்சியர் மயலையு மஞ்சிட் டிடுவோனே
அகத்தில் மிஞ்சிய வழகு பொருந்திச்
சுகத்தி ணங்கிய கருணை வளம்பெற்
றறத்த னந்த மெனுந்திரு நங்கைக் கனுபோக
சிறக்க வன்பர்கள் பணிபத தொந்தத்
தறத்த ருந்தவ முனிவர்கள் சிந்தை
செழிக்க வந்தரு ளருக சிநந்தப் பரமேசா
செகத்தில் மிஞ்சிய சுகுண வசந்தத்
துறைக்குள் விஞ்சிய சுரவர யெந்தைத்
திறத்தி லங்கிய குழைசை யுகந்தப் பெருமாளே.

இராகம்,–கமாஸ்.] 44. [தாளம்,–சதுர்ஸயஜாதி, ரூபகம்.

தரும தயாளச் சாரச சுரபர மேசப் பூரண
சததசுர ராடிப் பாடிய சிநதேவா
தலைவத்திரி லோகத் தாதா பலகலை நீதக் கேவல
சதிமண வாளக் கோமள முளசோதி

இருவினை யோடச் சாடிய குருகுல நாதக் காமனை
எரியிடு கோலச் சாகச பிரதாபா
இனியனு வாசப் பாடியே யனுதின மோதித் தேடியே
இறைவனை சாலப் பேணியே தொழுவேனே
அருள்மன தாகக் கூடியே கருணையி னலிப் போதுட
னலர்வெறி சோதித் தாமரை யடிதாராய்
அறிவழி கோடித் தீவினை செறியவ ஞசத் தாடிய
அசடனைக் காமக் குரோதனை யருள்பாராய்
திருமறு மார்பக் காவல கருணை விசாலத் தோடியர்
செழுமலர் மீதில் ஏறிய வருள்பாதா
செயசெய ராகத் துவேஷியே புயபலவீரச் சூரனே
திருவுரு வானச் சாரணப் பெருமாளே.

இராகம்,—கரகரப்ப்ரியா.] 45. [தாளம்,—சதுர்ஸ்யஜாதி, திரிபுடை.

பந்து மாமுலை கொடியிடை மதிமுக
மிந்து நேர்நுதல் கயல்விழி யளிகுழல்
பண்பு லாவிய குயில்மொழி யனநடை யெனுமாதர்
பங்க மாமய லொடுவவர் தாரமும்
பொங்க மாகவு முறைமுறை பருகியே
பஞ்ச பாணனும் விடுசர மதிலுற் றென்னாளும்
முந்த மீறியே அறிவழி மதிகுலை
சிந்தை யாலுன திருவடி யனுதின
மொண்டி டாமலே பலபல சலதியி லுழல்வேனோ
முன்பு தேவர்க ளனைவரு மொருமன
தின்ப மாகியே வுனைசக மதில்கொடு
முன்கி ரியெனு மகமெரு முடிவினி லழகாக

தந்து நீடியே அவர்பய சலதியில்
வந்து நேர்கொடு முடிமிசை பலமுறை
சம்பிர மாகவே சயசய வெனமொழி வபிஷேகந்
தங்கை யாலவர் சகலரும் பொழிவிட
மங்கை மார்களு மனமகி ழடைவுடன்
சங்கி தாதிக ளுடன்தகு தகுதகு திகுதிதோ
தொந்த தோதொகு தொகுதொகு டிகுடிகு
டுந்து டுடுடு டுடுடு டுடுடுவே
சொந்த தாளமு முலவிய நடனமு மவராட
தும்பு ராதிகள் மலகரி பைரவி
தம்பு ராதியில் வரிசை மொழியிட
சொந்த வாடையில் வருமரி யணையுறை பெருமாளே.

இராகம்,—கமாஸ்.] 46. [தாளம்,—சதுர்ஸ்யஜாதி, திரிபுடை.

அளக பாரமுங் குலைய லோசனம்
அதிவி காதமுற் றுடனேதான்
வதர மாமிதழ் வெளிற மாமுகம்
அதிக தோஷநிஷ் டூரமாக
கலைக ளாகவும் புளக மாமுலை
கனதி யாகிமெத் தவுமேவ
கடின மாரனேங் கணையை நாடியே
கலதி பூசலைக் கொடிதாக
உனைப தாகநெஞ் சுலர வெய்திடும்
உறுதி பாணமுற் றிடவேதான்
உலையில் வாடி மங்கிடு மெழுகென
உருகி யேவுடல் தடுமாறி

இளைய மாதெனுங் கலவி மாமய
விடுக மூழ்கிபித் தனுமாகும்
எனையு ளுதரம் பெறுவி லாசமும்
இலகுவாய் குணப் பெருமாளே.

முதல் நகர்.

இராகம்,—கமாஸ்.] 47. [தாளம்,—சதுர்ஸயஜாதி, திரிபுடை.

வேதா கமநெறி யாலேயனுதினம்
வீயா துணர்மதி யனுராகம்
மேலோர் புகழிட சாதா ரணமுடன்
வீரா யருகன தடிநாளும்
ஓதா தொழிபவர் மீளா நரகிடை
யூடே கியேயவ ரலைமூழ்கி
ஓயா மிகுதுய ராலே யலறுவ
ரோர்சா காயரு முளசோதான்
தாதா வுலகுணர் பூசா சிநமத
சாரா குணநிதி கலைஞானு
சாலோ காகன சாமீ பாசெய
சாரூ பாமதி சாயுச்சியா
நாதா முனிவரர் கோவே செயசெய
நாளு சுரவரர் புகழ்பாதா
நானே யுனதடி ஓதா வெனசிந
நாதா முதல்நகர் பெருமாளே.

இராகம்,—ஆனந்தபைரவி.] 48. [தாளம்,—சதுர்ஸ்ரஜாதி, திரிபுடை.

பொற்பதத்தி னைத்துதித்து விற்பனத் திருந்துபத்தர்
பொற்பிர சித்த மொத்த சத்து மறவாமல்
பொற்றகப் படித்திருத்தி நற்றுளத்தொ ருப்படுத்தி
பத்தி சித்தி யுத்த மத்த னெனநாளும்
தற்பரக்கி லக்கணத்தி லுற்பனக் கியற்குணத்து
தத்து வப்பொ ருட்கி சைத்த கலையாலும்
சற்றிகழ்ச் சிபற்றுபற்றி முற்றிமுத்தி னைத்திருத்து
தர்க்க சத்த வித்த கத்தை யுளாகி
உற்பவிற்ப வத்தையொத்தி விற்பணித்த சுத்தமொத்து
உட்க ளிக்கி சைத்த புத்தி யருள்வாயே;
உக்ரபுத் தசித்தநத்த விக்கிரமத் தறத்திறத்த
உச்சி தட்ட நற்கு ணத்து சருவேசா
நிற்பரத்து யாத்தபத்தி சற்புருட் க ருத்துமுத்த
னித்த சுத்த நற்ற யத்தை யுதவாயே
நிச்சவுச் சேவச்சகத்தை நச்சியற்று ளிஷ்டமுற்ற
நிஷ்ட சிஷ்டர் சித்த மொத்த பெருமாளே.

பெருமுகை.

இராகம்,—ஜெயந்த ஸ்ரீ.] 49. [தாளம்,—மிஸ்ரஜாதி, திரிபுடை.

கொலைபொய்கள வொடுசுரதி குபரிகிற் கமுதமட
கொடியமது சுரபிசித மெனுமாதி
குடிலமித மிவைகளையே குசலசிந வரநெறியே
குணமுடனே யணுகிமன மினிதாகி
கலைகள்பல பொருளுணர்மின் கலகவிழி வனிதையர்கள்
களபமுலை யலைமுழுகி யலையாமல்

கருமமக லிடுமுனிவர் கமலமல ரடிதொழுது
கடனதவ மதுமருவி வினையாரை

நிலைகுலைய தவிடுபொடி நிகரெனவே முடுகியிடு
நிபுணனெனும் நிமலமதி யுடனுவை

நிசபரம சுகமுமதி நிலையுடைய கதிபெறுவை
நினதுபுய வலிமையுரை யிடலாமோ

தலைவனென பலவுயிர்கள் சுரனெனவே வுனதுவடி
தனைமருவி செயசெயென மிருதாளா

சகலகுண சதுரவர தரணிடேரு முகையில்வரு
சரசனெனு மழகுடைய பெருமாளே,

இராகம்,–கமாஸ்.] 50. [தாளம்,–சதுர்ஸ்யஜாதி, திரிபுடை.

அன்னமின் நடையெனுங் கன்னிய ருடமய
னண்ணிய மதனையும் பொடியாக

அன்னணம் விலகிட உன்னிய சிகவா
நன்னிலை பெறுபவ ரதிமோக

மன்னிய கொலையொடு துன்னிடு களவுமே
மன்னுபொய் மதவினை மதியாசை

அண்ணலை யடைவுடன் கண்ணிய மனதுடன்
மண்ணொடு பொருள்மக ளெனுமோகம்

நன்னய முடன்விடு பன்னிய குரதமும்
நண்ணிய கஷயமொ டொருநாளும்

நன்னெறி யொடுகொடு மன்னிடு தரிசனம்
நண்ணியி னெழுகுத லொடுஞானம்

மின்னிடு மொடுபுகழ் புண்ணிய வரனென
எண்ணமில் பதவியை யினிதாக

எண்ணுமோர் வடிவமும் நண்ணிடு மதிசுக
மெண்ணுணர் வதில்மிகு பெருமாளே.

சேலூர்.

இராகம்,-பியாக்.] 51. [தாளம்,-சதுர்ஸ்யஜாதி, திரிபுடை,

பொறிநு கமுமர முறமா னனையார்
புழுவே யொழுகி மிகநாளும்
புலைகூர் கருவாய் வலைமேர் கமாதாற்
புணரா துலவி முழுகாடி-
வெறியா னவர்போ லறிவே பழுதாய்
விடவே யவுர்தா லுறவாமோ
விமலா நிமலா கமலா சனமே
விரல்நா விடையால் வருபாதா
துறவோர் கனியே யறமா தவனே
துயரோ வொழிய வருள்பாராய்
சுமுகா சமுகா விமலா கரனே
சுரநா யகனே சிகநாதா
திறமா யுனைநா னறியேன் தொழவே
திருமா மறுமார் பணைகாராய்
செகமே புகழால் வகைமா நிலனே
திருசே லூர்வாழ் பெருமாளே.

இராகம்,-கமாஸ்] 52. [தாளம்,-சதுர்ஸ்யஜாதி, ரூபகம்.

முல்லைக்கு நேர்நுலக்கஞ் சொல்லுக்கு மேல்விளக்கம்
பல்லுக்கு நான்மயக்க மிடுவேனோ
முன்னிட்ட மார்வடங்கள் மின்னிட்ட வார்தனங்கள்
பன்னிட்ட சேர்பனங்கட் கலைவேனோ
நல்லச்சி ராவகர்க்குஞ் சொல்லத்த போதனர்க்கும்
நகல்ப டாதிருக்குந் திருமேனி

நண்புற்று நானுகந்தும் இன்பத்தி னாலணைந்தும்
நன்சித்த மேசிறந்துந் துயில்வேனோ

கல்லைக்கு நேரடுக்குஞ் சுள்ளக்க மாமயக்கங்
கள்ளைக்கடாவொழுக்கந் தருவாயே

கள்ளத்து ரோகநெஞ்சம் பள்ளத்து ளானவஞ்சங்
கல்லொத்த பாவமஞ்ச முனிவோனே

தொல்லைத் துராகமங்க ளல்லற் படையடங்குஞ்
சொல்லுக்கு நேர்ப்தங்க ளருள்சோதி

துன்பத்தை யேதுறந்தும் இன்பத்தி னாலுயர்ந்த
சுவர்ணச்ச ரீரஎந்தைப் பெருமாளே.

இராகம்,—ஆனந்தபைரவி.] 53. [தாளம்,—சதுர்ஸ்யஜாதி, திரிபுடை.

அகத்தினி லிருக்கும் மிகப்பெரு வினைக்கும்
அடிக்கடி நெருக்கு முனதாளை

அகப்பட நினைத்தும் மிகப்பத மளிக்கும்
அயிக்கம தனைத்தும் அருள்வாயே

செகத்தினி லொருத்தர் வகைப்பட வகுத்தர்
திருத்துட னிருத்தற் கருள்சோதி

திருப்புக ழுரைத்த லொருப்பட வரைத்தற்
சிறப்புகழ் நிறைத்த குணநாதா

இகப்பர முடிக்குஞ் சுகப்பத மடுக்கும்
இணைத்திரு வடிக்கு மினிதாண

எழிற்பிற விசுத்தை யழிப்பவ ரகத்தை
எனக்கருள் நிசத்தை மொழிவாயே

நகைக்கருள் முகத்தி நகைப்பெரி யகத்தி
நலச்சுக மிகுத்தி யுடன்வாழ்வே

நலத்தொரு விளக்கம் இலக்கண துளக்கம்
நமக்குள விளக்கம் பெருமாளே.

இராகம்,–எதுகுலகாம்போதி.] 54. [தாளம்,–சதுர்ஸ்யஜாதி, திரிபுடை.

பகவசங்கர தேவாஸ்ரீசிந
சுகம ணந்தசு ரேசா வாகுயர்
பரம சுந்தர நீதா மாதவர் பணிபாதா
பலவிதங்கொடு யானே நாடொறு
மலர்ப தந்தனை மாறு தேமனம்
படிய வந்தனை சேயா தேவருந் பழியாலும்
மிகபரங்களும் வீறுதேமிக
பகைய டர்ந்திடு நோயோ டேமன
மினிது நொந்திடு வேனே சாலவு மெழில் வாடி
இறைவசுந்தர யீசா தோகைய
ருறவு மங்கிய தேசா காமனை
எரியி ணங்கிய சூரா சாகச வரதேவா
செகமுணர்ந்திடு வோனேநீயெனை
வெகும றந்தது வேனே சேயுவை
செயலு மென்தர மோதா னேதிடு பரமேசா
திறலமமங்கிய நாயே னேயினி
பொறுமை யன்பொடு காரா யோகுண
சிதசி நந்த தயாளா பூரண கருணாளா
அகமகிழ்ந்தரு ளாதாராகொடு
சகச னங்குண மேதா நீயிடு
அழகு மிஞ்சிய தாதா வேகருணை யினாலும்
மதிதுறந்தர நாதா கோமளக்
கதிக டந்தருள் நீதா வீரிய
வமல பங்கய பாதா சீருள பெருமாளே.

அருகாவூர்.

இராகம்,-பியாக்.] 55. [தாளம்,-சதுர்ஸ்யஜாதி, திரிபுடை.

பத்தர் மனப்ரிய முத்த குணக்கடல்
பட்சம் விளைத்திடு பலபூர்வ
பச்சிம தெட்சிண நிச்சய உத்தர
பக்க மனைத்துள வுயிர்தானும்
சற்று நினைக்கவும் முத்தி யளித்திடு
சற்குண கற்பக வறிவோனே
தற்பர நித்தனே மெய்ப்பு வணக்கிட
சற்று முணர்ந்திலே னெனைநாளும்
நற்ற யவுற்றுணி சுத்த பரப்ரம
நற்சொரு பத்துரு வருள்வாயே
நச்சு வினைப்பகை யச்ச மறக்கெட
நட்ட மடுத்திடு மதிவீரா
வெற்றி புகழ்ப்பெரி தற்றி மிகுத்திடு
மிக்கரு கப்பதி தனில்வீறும்
மெய்ப்புக ழுக்கிணை யொப்ப வெனக்குயிர்
மித்திர னெனத்தகு பெருமாளே.

இராகம்,-கமாஸ்.] 56. [தாளம்,-மிஸ்ரஜாதி, ஜெம்பை.

களபமுலை பார முங்குலுங்க
அளகமுடி சால வுமிலங்க
கரவளைக ளோல முந்துலங்க மதராசன்
கடினசர மீள வுமிலங்க
உடைநெகிழ வாடை யுங்கலங்க
கடிதுடையி னோர முமிரங்க விரகாலும்

சுனையதர மாமு கம்நிரம்ப
யிளையருரு வேர்வை யுமரும்ப
சுரதரதி லீலை யுமெழும்பும் மடமாதர்
சுகமயலி லாடி யங்கிருந்து
வகைபரத நூலி னின்பொருந்து
சொகுசுபத்த சார முந்தெரிந்து யிசைபாடி
உளமகிழ வாச முமணிந்து
பளபளென தாட னஞ்சிறந்து
உசிதமுடி மீதி லுயர்ந்திருந்த வதிதானம்
உறுதிபெற நாடி யங்கலந்து
மறுகிமன மீறி யங்குறங்கி
யுழலவடி யேனும் நெஞ்சிணங்க யிடுவேனோ
களைதெளிய போதை யங்கருந்தி
உளமகிழ சாத னந்திருந்தி
கருதிபெற வாத ரம்பொருந்தி யிடுவாயே
கமலபத சார சம்பரந்த
நமனையுதை பாத முந்திரண்ட
கருணைசுர ராச நெஞ்சிருந்த பெருமானே.

இராகம்,–கமாஸ்.] 57. [தாளம்,–சதுர்ஸ்யஜாதி, திரிபுடை.

புருபர மகேச கருணை வடிவான
புகழுரு சுநாதப் பெருமாள்காண்
புசபல குணட்டிய விசய சுரராஜ
புனிதச ருவேசப் பெருமாள்காண்
திருமறு வுமார்ப அருக சிநநாத
சிநவர தயாளப் பெருமாள்காண்
திகழ்கம லவாச சுகதர விலாச
சிநசம யவாதிப் பெருமாள்காண்

கருணைநி தியான பரம பரமேச
கலகவி னைநீத்தப் பெருமாள்காண்
கசடர் பரவாதி யசர வுயர்ஞானக்
கலைகள னுபோதப் பெருமாள்காண்
பெருமைமி கபோன்ற சொருப குருநாத
பிறவிவி னையோட்டும் பெருமாள்காண்
பிரபுல முளவீட்டை சுபதி யினில்வாழும்
பெரிய திருமூர்த்திப் பெருமாளே.

இராகம்,-ஆனந்தபைரவி.] 58. [தாளம்,-சதுர்ஸ்யஜாதி, திரிபுடை.

நெருக்குமிருந் தருக்குமுலை
நெருக்குஞ்சிலை விழியார
நிறக்கும்படி சறுக்குங்குழல்
நிலத்தும்புர ளொடுதாவ
உருக்கும்மத சரத்தின்கொடு
உரத்தின்மிசை யதுமேவ
உலைச்சென்றிடு கலக்கமெழு
குருக்கும்படி யுழல்வேனே
பெருத்தன்பொடு திருத்திந்திரிய
பெலத்தின்கொடு வினையாரை
பிடித்தும்பொடி படுத்துஞ்சிட
பிளக்கும்படி யருள்தாராய்
திருத்தங்கிய உரத்தன்பர்கள்
சிறக்கும்புக ழருகேசா
செழிக்குஞ்சிந வரத்துங்கனே
சிநச்சங்கரப் பெருமாளே.

அகலூர்.

இராகம்,–ஆனந்தபைரவி.] 59. [தாளம்,–கண்டஜாதி, ஏக தாளம்.

சித்தி முத்தித் திருவை நத்திபத்திப் புணருஞ்
சித்த நற்றத் தலைவ னுனையேதான்
சிட்ட ரொட்டித் தினமு முட்ட முட்டப் பணிவர்
தொட்டி கட்டப் பிறவி யினைமாள
வைத்து சித்தக் கருணை யொத்து பத்மச் சரண
மற்றி தயத்திற் புரிவை யினிதாக
மக்க ளொக்கப் புணருஞ் சித்த மொக்குங் கலவி
மைக்கு மொய்க்குக் குழலி மடமாதர்
சுத்த மொற்றத் தவிசு மற்ற சித்திர த்துடைமை
துய்த்த மெத்தைத் தகமு மெனுமோக
துப்பு மப்புக் கடலி லொப்பி நட்புப்படுதல்
சுப்பிர மொப்புத் தறிவு மிணையாமோ
குற்ற மற்றற் றெருவர் நித்த சுத்தத் தனருங்
கொற்ற சித்தத் துனிக ருளரோதான்
குட்டு முட்டப் பொளிரும் பட்டர் சட்டத் துணிகர்
குட்டு கெட்டிட் டகலூர் பெருமாளே.

எயில்.

இராகம்,–கரகரப்ரியா.] 60. [தாளம்,–சதுர்ஸ்யஜாதி, திரிபுடை.

உலகுயர் கதியைச் சேரும் நெற்றியும்
பலவுயிர் தொழுபொற் பாத கீர்த்தியும்
உனதிரு வழகுக் கோர்வை யாக்குவ ருளரோதான்
ஒருமொழி பலசொற் போத வாக்கிய
திருமறு வுரணக் காதி நீக்கிய
உயர்சம சரணத் தோடு பாக்கிய பரமேசா

பலபவ சலதிப் போக வாட்டிய
நலமுள சரணச் சாக சாட்டிய
பரமனே கமலச் சிரேணி நாட்டிய சுரநாதா

பணிபவர் மனதிற் றோணு மாட்சியே
மணிமுடி யமரர் காணி யாட்சியே
பதிதிரு கணமொய்ப் பான காட்சியே உலகேசா

மலையக் குசுமத் தோடு தீப்பமுஞ்
சலசரு பலமரக்கி யாதிதூப்யமும்
வகையுட னுனையஷ் டார்ச்ச ஞர்த்தியை மனமார

மறையுள படியிற் கூடி மூர்த்தியே
முறைமுறை நொடியிற் பாடி வாழ்த்தியே
வசையில துனையெக் காலு மேற்றியே தொழுவேனே.

நிலைபெற வெனையிப் போது கார்த்தருள்
அலைகட லனையொப் பானசித்தய
நிமலனே சமலத் தூடு சாற்றிய வரதேவா

நெடிதென புகழெழக் காலு மாக்கிய
அடைவுள நகரிப் பாரில் தாக்கிய
நிசமெயில் நகருற் றேகு பாக்கிய பெருமானே.

இராகம்;—கமாஸ்.] 61. [தாளம்,—சதுர்ஸயஜாதி, திரிபுடை.

குயவனுக்கிய கலமெனுப்பிய
குடலினீட்டிய பிண்டமாகி
குழவியாப்புவி யதனிலாட்டியே
குளறிவாய்க்களி கொண்டுலாவி
வயதுதேற்றியே முலைமின்னார்கள்தன்
வலையிலாப்பட மண்டிநாளும்
மகிழ்செவ்வாய்க்கட லதரசாற்றினை
வகையினூற்கடி துண்டுநாயேன்

செயலிலாப்படை மதனகாங்கையிற்
    தெளிவிலாக்கடை வண்டனாகி
தினமுமாற்றினு ளுழலுதூர்த்தனை
    திறமையாக்குவ தெந்தநாளோ
புயவலாச்சிநக் கருணைமாக்கடல்
    புகழ்பராக்கிரம சம்புவாமா
புவியிலேற்றிய பாமகாட்சிய்
    புரவியோட்டிய தம்பிரானே,

இராகம்,-ஆனந்தபைரவி.] 62. [தாளம்.-கண்டஜாதி, திரிபுடை.

திருமருவு விஞ்சுமகி ழுங்கமுந் தங்கமு
    மருமறைகள் கொஞ்சியிடு சங்கமு மரங்கமுஞ்
    செயல்கருணை முந்தருளு மந்தமுஞ் சந்தமும் முன்புமாக
திகழ்வடிவு கஞ்சமிரு தொந்தமுங் கந்தமுஞ்
    சகமுழுது முந்துணரு மின்பமு மன்புவுந்
    திறலரியதிண்புயமே கொண்டலு மண்டலும் முந்துசால
இருவினைக ளஞ்சியிட வெண்ணலுங் கொண்ணலு
    மரியணையில் வந்தருக சங்கரன் புங்கவன்
    இலகுமணி தங்கியிடு வெண்குடை யினன்குடை
        நங்கொண்டநீழல்
எழில்பெரிய யிந்துரவி யண்டிடும் மண்டிடும்
    அழகுவெயில் தங்கிய துலங்கமும் பொங்கமும்
    இறைவசிந சம்புவே வரந்தரு நிரந்தரம் எந்தையானே
கருணையுட னுங்கிருபை கண்டிடுங் கொண்டலெம்
    மொருமனதி விம்பிடவே நம்பிபு மாம்பவுங்
    கனிவுமகி ழுந்தமுள மந்திரந் தந்திரம் முந்தவாளாய்
கமலபவ னிந்து சடை சங்கரன் பங்கரன்
    உமைதமை யனும்பெரிய விந்தகன் சிந்தகன்
    கடியவினை சிந்திட மண்டியுங் கொண்டிலா வண்டராவார்

தருமசிர பிண்டிநிழ லங்குறைந் தங்கநின்
 றருமத மடங்கலும் வென்றிடுங் கண்டனஞ் [வே
 சமவசர ணங்குள மருமரும் மருந்தெனும் , எங்கள்கோ
சகலசுர ரும்புகழு முந்தவு மந்தமும்
 நிகழ்கமெ னும்பரம மங்கள மெங்களைத்
 தயவுடனே யஞ்சலென தின்சொலுங் கொஞ்சிடுந்
 தம்பிரானே.

களபலூர்.

இராகம்,-பியாக்.] 63. [தாளம்,-மிஸ்ரஜாதி, ஜெம்பை.

உலகமதி லேசெனிக்கும் பலவயண மாமுயிர்க்கும்
 உறுதியற மேயுரைக்கும் பெருமானே
உயர்கதியி லேயிருக்கும் செயல்வரசி நேசநித்தன்
 உயர்புகழ்வி சோதியுற்ற பெருமானே.
அலறிவினை யாலடுக்கும் கலகம தனைகெடுக்கும்
 அருகபர மேசவர்க்கப் பெருமானே
அகில வுலகாளு மத்தன் சகலகலையோது வித்தன்
 அமரர்தொழ வாகுபெற்ற பெருமானே
கொலைபொய்கள வோடுகுற்றம் பலவுமட வேகெடுத்துங்
 குணமதிக வீரமுற்ற பெருமானே
குறைபிறவி சாவுமற் றுந்துறவியர்கள் நேசமுற்றிங்
 குமுதமடைவே திருந்தும் பெருமானே
நிலைமையுள நீதிமுத்தன் பலமதிக சாலிநித்தன்
 நிருபமணி நாம சித்தப் பெருமானே
நிமலபர மேஷ்டியத்தன் கமலமது லாவுகர்த்தன்
 எழில்களப லூரிலுற்ற பெருமானே

67748

வங்காரம்.

இராகம்,-கமாஸ்.] 64. [தாளம்,-சதுர்ஸ்யஜாதி, திரிபுடை.

வண்டே கொண்டார் தண்டா மரையே
வந்தே யுலவு மலர்பாதா
வங்கோர் சிங்கா துங்கா சனமேல்
மங்கா தரவா யமர்வோனே
பண்டே யுண்டா மண்டா வினையால்
பண்பே நுகரா வடியேனும்
பந்தா குந்தே சந்தார் முலையார்
பங்கே முழுகி யிடுவேனோ
நிண்டா ளண்டே வுண்டோ புகலாய்
நின்சீ ரன்றோ கதிகாணும்
நின்போ லன்பா யென்பா லுளரோ
நின்தா ளுதவி யெனையாளாய்
அண்டோர் கண்டே கொண்டா டுலவும்
அங்கா கமமே அறிவோனே
அங்கோர் வங்கா ரங்கூ ருறையு
மன்போ டெந்தை பெருமானே.

சேரி.

இராகம்,-சங்கராபரணம்.] 65. [தாளம்,-சதுர்ஸ்யஜாதி, திரிபுடை.

மலர்தாமரை மாமுக மீதிரு
கயல்நேரினை யாம்விழி மாதர்கள்
மலைபோலிரு தோள்முலை மீதினில் மயலாகி
மணிவாயித ழூறிய பானமே
யினிதாகவே நாளுமே கோரியே
மதிசீன னு மாகியே சேரவு மினிதாமோ

பலநாளுமு ளுதர வாயிரு
சரசிருக மாகிய தாளினை
பணியாமலே பாதக ளுகிய . படியாலும்

பவமாகிய யோனியி லேகியே
கதிநாலினி லோடியே மீளவும்
பதியாகிய தோர்நிலை வாடவும் அழகாமோ

சிலமாமத ளுேடவு மோதியே
வுயர்சேவுக சாகச சூரனே
திறல்விரிய ஞானம கேசனே சிநராமா

திருமாமறை யோதியே போதியே
அலையாநிலை மேவிய சோதியே
செகதாதா வாகிய வாதியே உனைநாளுஞ்

சலமாகவே பாடியே யாடுவேன்
திறமாகவு மாளிடு வாயெனை
சகலாகம போதனை யேகடி தூதவாயே

சகமூன்றினு மேதொழு பாதனே
அழகாகிய கேவலி நாதனே
சதமாதியே சேர்யில்வாழுவீர் பெருமானே

தச்சூர்.

இராகம்,-நாதநாமக்ரியை.] 66. [தாளம்,-அடதாள சாபு.

திருத்தக்கப் பெருத்தர்த்தி செகத்துச்சித் தலத்திச்சை
செயற்சித்தித் தனைக்கர்த்த ளிடபாதந்
தினத்துற்றுப் படித்திட்டுச் சிறப்பொக்கக் களித்திட்டுச்
செழிக்கற்றுப் பணித்திட்டுத் தணியாமல்
விருப்புற்று சிறுக்கித்தற் குயத்நிற்பட் டலைப்பட்டும்
விழிக்கெண்டைக் ககப்பட்டும் விரகாகி
வெறிப்பித்துத் தலைப்பட்டுத் திகைத்திட்டுக் களைத்திட்டும்
மெலித்திட்டுக் கொழுத்திட்டு மழிவேனோ

ஒருத்தன்புத் துதித்திட்டத் தெனைச்சற்றுக் களித்திட்டத்
துறக்கத்தைக் கொடத்தக்க ருளாரோதான்
உகத்துக்குச் சுகத்துக்குட் பகைத்திட்டைக் கெடுத்திட்டுத்
துறக்கச்சித் தியைப்பற்ற வருள்வாயே
திருத்தக்கப் புரத்துக்குக் கினைக்கொக்கத் தலத்தொக்குச்
செயற்குத்தப் பரற்கிச்சைப் பலமேவுஞ்
செயத்தம்பப் புகழ்க்கொற்றத் திருத்தச்சுர்ப் பதிக்குற்ற
சிரசித்தக் குணத்தொத்தப் பெருமாளே.

பெருதிருக்கோவில்.

இராகம்,-கமாஸ்.] 67. [தாளம்,-சதுர்ஸ்யஜாதி, திரிபுடை;

சுருதியா லேற்ற வுயிர்களை மாற்றி
துணியவே விழித்து வுயிர்போக
துடருமோ மத்தில் மிகவும்நெய் யூற்றிச்
சொரியயா கத்தை யடைவாக
வரிசையா லாக்கி பிசிதமே னுக்கில்
வகையொடே தாக்கித் தினவேதான்
வடிவுதே வாக்குங் கசடநூல் நீசர்
மருகியே மாற்றி லுழல்வாரே
கருணையால் நோக்கி சகல வான்மாக்கள்
களைதயே யாக்கு மதுவேதான்
கன பிரதாபத்திற் நிலையதே சாத்திர
கருதுநூல் சூத்திர வதமாகும்
பெருமையா லேற்ற சிநனை வாழ்த்த
பிழையிலா நீத்த கரனுவை
பிரபலமேபூத்து வுலகெலா மேத்தும்
பெருதிருக் கோவிற் பெருமாளே.

இராகம்,—ஆனந்தபைரவி.] 68. [தாளம்,—சதுர்ஸ்யஜாதி, திரிபுடை.

அம்புவிழி யாலுங் கும்பமுலை யாலும்
அன்புருகு மாதர் மொழியாலும்
அந்திமதி யாலும் முந்துகுயி லாலு
மங்கச னாலு மதிமோக
ரம்பையெனு மாதர் சம்பிரம விநோத
ரஞ்சித கலாப மயல்மூழ்கி
ரங்குபெறு வாச குங்கும படீர
ரம்பு முலைமீதி லணையாடி
இன்பமொடு கூடி தம்புரொடு பாடி
இங்கித விலாச விரகோடும்
இன்சொலை விகார நெஞ்சமதி பார
மெந்தனை விடேக முனிவாயே
நம்பியுனை நாடி யன்புடனே பாடி
ரம்ப வொருகோடி துதிபாடி
ரங்கமொடு தேடு மிங்கிதருகேசு
நங்கள் குலநேசப் பெருமாளே.

இளமங்கலம்,

இராகம்,—கமாஸ்.] 69. [தாளம்,—மிஸ்ரஜாதி, ஜெம்பை.

கற்கண்டென மங்கையர் சொற்கொண்டவர் பங்கய
கைச்செண்டு தனங்களை யழகாகக்
கட்டுண்டத ரங்களை யிட்டுண்டு மதங்கொள
கைச்சண்டை யடர்ந்தவ ருடனேதான்
பற்கொண்டிதழ் புண்பட நற்கொண்டை யவிழ்ந்திட
பட்டுத்தி நெகிழ்ந்திட வுகிர்பாய
பட்சங்களி லங்கவு முச்சங்கை துலங்கவும்
பற்றின்ப மடங்கவு முறவாடி

சொர்க்கந்தனில் மிஞ்சிய வர்க்கண்புரு வஞ்சியர்
சுற்றங்கள் விலங்கவு மடியூடே
சுட்டிக்கிரிய சங்கையை நட்டிந்திர சுகங்களை
சுப்பிரம்பெற வங்கருள் புரிவாயே
அர்க்கன்றெளி மண்டிய பொற்கஞ்சமி தண்டிய
அத்தன்பத ரெண்டையு மறவேனே
அப்பன்எழில் தங்கிய விற்பன்னிள மங்கல
மற்றின்குடி யங்குறை பெருமாளே.

விருதூர்.

இராகம்,–ஆனந்தபைரவி.] 70. [தாளம்,–சதுர்ஸ்யஜாதி, திரிபுடை.

ஆலகாலக் கொடிய நீலவேகத் தடிய
ஆசை மாதர்க் கடையின் விழியாலும்
ஆபாரத் தளப சாரமோகப் பளப
ஆனை கோடுக் களப முலையாலுஞ்
சோலைமேவுக் குயில்க ளோலமாகக் கிளிகள்
தூய! பாகுத் துளிகள் மொழியாலுஞ்
சூடுமாடைத் தடையபி னீடுநாகப் பணியின்
தோகை யோனிக் கடையின் முழுகாடுஞ்
சாலஞானக் கடையின் மாலசாதிக் கொடியன்
தாறு மாறுச் சுடிய னெனையேதான்
தாகமாகக் கருதி ஆகமாதிச் சுருதி
சாத னுதித் தருதி மிகவாளாய்
நாலுவேதத் துறையே மேலுமாதைக் கிறையே
நாது சாதுத் துணையே கருணாளா
நாரிசேருற் றவிரு தூரில்மீ தூற்றுவரு
நாக ரீகத் தமரர் பெருமாளே.

இராகம்,—காகரப்ரியா.] 71. [தாளம்,—சதுர்ஸ்யஜாதி, திரிபுடை

கனத்தி ரும்பலு மீளையுஞ் சூலையுஞ்
செனித்த பாண்டுவு மூலமும் வாதமுங்
கரித்த டர்ந்திடு சீதமு மீறியே தடுமாறி
கருத்த கண்களு மூடிய பீளையும்
வெறுத்த னந்தலுஞ் சாலென வயிறு
கனத்து வளர்ந்திடு நோயொடு சாலவு மயிர்தானுங்

வனத்தில் விஞ்சிய மான்மயி ராகவும்
பினத்தி டும்பல வாய்மொழி சாலவும்
வருத்தி யுஞ்சல மீறியு மூடியுங் கனமாகி
வருத்து யர்ந்திடு மூதலு மாசலு
மிகத்து லங்கிய ஆவியும் போகவும்
வளைத்தி னங்களு மோலமே தானிட மனையாளுந்

தனத்தி லும்புடை தாடன மாடிய
மினித்தி ருந்திடே ஞனில மீதினிற்
றடுக்க வும்பல நோயுள வாழ்வையே ஒழியாயோ
நினைத்த லுந்தனை மானிட ரானவர்
கனத்த முந்திய தீவினை மாளிட
நிசத்தை யன்பொடு காணலும் நீயருள் புரிவோனே

நிறத்து லங்கிய சோதியே ஆதியே
வெறித்த பங்கய வூர்தியே நீதியே
நிலைத்த அண்டர்க ளாடியும் பாடிய பெருமானே.

வேலூர்.

இராகம்,—காகரப்ரியா.] 72. [தாளம்,—சதுர்ஸ்யஜாதி, திரிபுடை.

பொங்கிய வாள்விழி யிட்ட ழைப்பவர்
அங்கிரு தோள்முலை கட்ட விழ்ப்பவர்
புண்பட வாயித ழூற்ற ழைப்பவர் மயலாலே

புன்சொலே நாளு மிகப்ப டிப்பவர்
கொஞ்சிமே நாணி மடிக்கி டப்பவர்
பொன்களே கோடி மிகப்ப ரிப்பவர் கவினாடே

பங்கய மாமுக முத்த ணைப்பவர்
அங்கச னுண்மை செலுத்தி விற்பவர்
பண்படு வீணை தனைத்தொ டுப்பவர் மயல்மூழ்கி

பங்கமே நாளு மடுத்த டுத்திடு
பொங்கிய பாதக பித்த ரதீதனை
பஞ்சை யனுதி பழித்து ருத்தனை தயவூடே

பண்பொலி போதி திருத்தி னத்தய
கண்களி யோடு பெருத்த ரட்சையை
பண்டுபோ லாக வருட்கிரு பைக்குடை யுதவாயோ

சங்கர னேசிந் சித்த உத்தம
ஐங்கணை யானை யறுத்த வித்தக
சம்புசி நேச செகத்திரயப் பதி சதுரேசா

சந்தத மேயுனை நற்ற மிழ்க்கொடு
சிந்தனை பாடிய பத்தரிற் பிரிய
சம்பிரம வேலூரினிலுற்றிடு பத்தர்கள் பெருமாளே.

வளத்தி.

இராகம்,—எதுகுலகாம்போதி.] 73. [தாளம்,—சதுர்ஸ்யஜாதி, ரூபகம்.

பேர்பெரிய குட்டமூலம் மார்புலரு பித்தவாதம்
பீடையொடு கெட்டமாலை உயர்சூலை
பேதியோ டிளைப்புளை வாதமொடு பித்தரோகம்
பேசரிய சுத்தகாசஞ் சிரவாதம்

நீர்பெருகு மூத்திரகிரீசம் மோர்குளிர் வெதுப்புவாசம்
நீள்பெரிய சத்திசித மிவையாலும்
நீதலை வலிப்புவாசம் பேர்வயிறு மொர்த்தவாதம்
நீதமில மூர்ச்சைவாயு மவையோடுஞ்

சீர்குலையு பட்சகாதம் நீரிழுக லற்றமாங்கிசந்
　　தீதுள வுறுப்புவாசல் 　　நவமாலும்
சீழ்பெருகி மெத்தநாறுந் தாபவுடலத் தில்நாலுந்
　　தீதுபிர மித்துவாடி 　　யிடுவேனோ
சார்பொருவ ருற்றபேர்கள் வேர்புளரோ முத்திநாதர்
　　சாகச சரற்கதேசா 　　சருவேசா
தாய்தயவு முற்றசோதி தூயமொழி விதித்தநீதி
　　சாலவும் வளத்திமேவும் 　　பெருமாளே.

இராகம்,—கரகரப்ரியா.] 　　74. 　　[தாளம்,—ஏகதாளம்.

சிலைக்காம னுற்றுக் கொலைப்போர் வகுத்திட்
　　டிடேப்பா ரதத்துக் 　　கிளையாதே
சிறப்பாய் விழிக்கும் பொறிப்பா வையர்க்குந்
　　திகைத்தே மயக்க 　　மணுகாதே
கொலைக்கே மனுக்கைம் புலத்தே கயிற்றைக்
　　குறித்தா சைப்பட்டுக் 　　கிடவாதே
குணத்தால் மிகுத்திட் டிணக்கா மனத்தைக்
　　குறிப்பா யொருப்பட் 　　டுடனேதான்
கலைப்பா ரினத்தைத் தொலைத்தே யகற்றி
　　கதிப்பேர் பதத்தை 　　மிகநாடி
கடைத்தேறி சொற்கற் றடத்தேறி மிக்க
　　கனப்போக முற்றுக் 　　களியாடி
அலைக்கா மனத்திற் புலைத்தாக முற்றித்
　　தனுப்போக சத்தி 　　யுளனாகி
அனைத்தேவர் நித்தம் நினைத்தே துதிக்கும்
　　அடிக்கே சிறக்கும் 　　பெருமாளே.

காசி.

இராகம்,-எதுகுலகாம்போதி.] 75. [தாளம்,-சதுர்ஸ்யஜாதி, திரிபடை.

உடலின் மேற்பிரிய மாயென் னுளுமே
புடவை யாற்பணி யாலே சூடியு
முசித பூச்சுக ளாலே மூடியு மின்பமாக

உரிசை யாக்கிய ஆன்பா லாறுடன்
றிரிய பாற்சுவை பானு திகளூட
னுளம காட்சியி னாலே போசன முண்டுநாளும்

விடனு மாக்களி யாலே வோடியே
நடலே காட்டிய மானூர் மாய்கையின்
விடம தாக்கிய காம ராகமே கொண்டுநாளும்

விரக மாக்கிய போகா வேசமுஞ்
சுரத சூத்திர கோலா காலமும்
வினையு மாக்கட லீலா சாலமும் சொம்புமாகி

இடைவி டாப்பக விரவே தோதக
மூடனே தேக்கிய மாயா மோகமு
மினிது போக்கடி யாதே சாலவும் நொந்துநாயேன்

இயல்பி லாக்கடை யானேர் பாவியை
நயக டாட்சம தாலே யாளுவ
னிறைத யாக்கடல் தாதாவேயினி எந்நாளோ

கடவு ளோத்தம சீலச் சாரனே
உடலை நீத்தொளி தேசா காரனே
கமல மேற்றிகழ் பாதா தாரனே எந்தையானே

கருணை யாற்சிந கோவே மாதவர்
பெருமை யாட்சிபி ரானே சோதியே
கதிகள் நீக்கிய தாதா காசியிற் றம்பிரானே.

பொன்னூர்.

இராகம்,-கரகரப்ரியா.] 76. [தாளம்,-திரிஸ்ரஜாதி, திரிபுடை.

பத்தர்க்கினி தேடரிதாகிய
சித்தத்தொடு கூரறிதாகிய
பட்சித்துணர் சோதியதானது மினிதாக
பட்டற்புகழ் பாடரிதாகிய
முட்டற்கொளி காணவொணாகிய
பத்துமட்டமே யருளாகியே தாவேணும்

கற்றைக்குழல் மானனையார்தன
சித்தத்தணு காதொருபோதினை
கற்பித்தெனை யாளுமுபாயமே புரிவாயே
கட்டப்படு மாபலயோனியில்
முட்டத்தடு மாறியேமீளவும்
கத்திக்கதி தோறுமுலாவியு மலைவேனோ

சுத்தத்தம ரேசர்துதித்துனைத்
தித்தித்திமி சேகெணதோகெண
தொக்குத்தொகு தோதிமிதோதிமி யெனதாளந்
துப்புற்றுட னேயவராடிட
மெய்ப்புத்துட நாரதர்பாடிட
சுப்பிரக்கம லாசனமேவிய வருள்பாதா

வெற்றித்திரு மாதொருகேவலி
சித்தக்கரு ணாகாரணாகிய
மெச்சுச்சுக மேபுகழாகிய இறையோனே
மிச்சப்புக ழாகியவீரிய
சொர்க்கப்பதி யாமெனமீறிய
மிச்சப்பொன் னூரினில்மேவும் பெருமானே.

இராகம்,-பியாக்.] 77. [தாளம்,-சதுர்ஸ்யஜாதி, திரிபுடை.

நல்ல ஞானத்துநெறி சொல்லும் வாறுத் ததனை
நண்ணி சாலக் கருது மதியாலும்

நன்று நாமக் குரத குன்றி மாளப் பொருதி
நம்பு மாதிப் பொருளே யினிதாக

அல்ல லோடக் கடுகி தொல்லை பாவப் பகையை
அங்கி மூளக் கடுகு பொடியாடி

அண்டர் கூடிக் குலவு கொண்ட ஞானக் கடலே
அங்கு லாவிப் பரவி மனதூடே

சொல்லு லாவித் தினமு முல்லை பாதத் தணுகி
துய்ய சோதிக் கடலில் முழுகாடி

சொந்த ஞானச் சுகமு மந்த மாகப் பெருகி
துங்க சாரச் சுகுண முடனேதான்

இவ்வி லோகப் பெரிய சொல்ல ஞானத் துறையி
னெல்லை யாளத் திறலை யுடையோனே

எண்ண ஞதிப் பொருளே விண்ணி லோகத் தொளிரு
மெங்களாதிப் பெரிய பெருமாளே.

குளத்தணிநகர்.

இராகம்,–உசேனி.] 78. [தாளம்,–சதுர்ஸ்யஜாதி, திரிபுடை.

பொறிவழிப் படுதரைப் பறிவழிக் குருடரைப்
பொதுமனப் புகுவரை எந்தநாளும்

புயவலிக் கிறுதரைத் தயவறக் கொடியரைப்
புணர்பரச் சதியரை நிந்தையாக

சிறியசொற் கபடரைக் கிருபையிற் கடையரைச்
சினமலிப் புடையரை பண்பிலாமல்

சிலவுயிர் களையழிக் கொலைபடுத் திடுமவத்
தினைகொடுப் பவர்மன மஞ்சியாதே.

செறுபயிடக் குடிகெடக் குறைபடுப் பவர்களைத்
தெளியவிட் டகலவு மனந்தாராய்

சிவபரத் தவமுடித் தவரிடத் திடுகிருபைத்
திருவடிக் கடவுளை யெம்பிரானே

தெறிகெடப் பிறவியைக் குறைபடக் களைவதிற்
செயலுளப் புயவலி சுந்தரேசர்
திருவிருப் பிடமெனத் தொருகுளத் தணிநகர்
செயமிடத் தணுகிய தம்பிரானே.

நாங்கிரி.

இராகம்,-சங்கராபரணம்.] 79. [தாளம்,-சதுர்ஸ்யஜாதி, திரிபுடை.

ஒளிமணி தெற்றித் திலங்கு சந்திர
கலையென முட்டத் துலங்கி விஞ்சிய
உயர்கன சத்திரத் திரயங்கள் மண்டிய நிழலூடே
உசிதவி சித்திரத் திரயங்கள் மிஞ்சிய
நிசமரி யுற்றுத் தடர்ந்து தங்கிய
ஒருவனை யத்திற் றுடர்ந்த பங்கச மதிலேதான்

அளிகுயில் சத்திட் டசைந்த பிண்டியில்
தெளிவர னுற்றுப் பிரபஞ்ச முந்துணர்
அகில வுயிர்க்கும் பரிந்து நின்தய வருள்வோனே
அமரர்கள் சுற்றத் தடங்க லுந்தொழு
திமிதிமி தித்தித் திமிந்தி மிந்திமி
அதிநட னத்துத் தடர்ந்த பொன்னெயில் வருவோனே

களிமத முற்றுச் சிறந்து வங்கச
ஞெளியொடு பத்மச் சரங்க ளேந்தையுங்
கதறிட வெட்டித் துறந்த சங்கர வதிசூர
கதமத மற்றத் தனந்த சுந்தர
பதமளி பத்தர்க் கிணங்கு புங்கவ
கலைவல சத்திப் புனைந்த மந்தர மகதேவா

எளிதென முத்திக் கிசைந்த குங்கும
புளகித முற்றுச் சிறந்த கொங்கையி
னிணைபுய முற்றுத் தழுந்த வணைந்தருள் திருமார்பா

இகபர சத்திச் சிறந்த விஞ்சைய
நகரென மெத்தத் துலங்கு மிங்கித
எழில்புனை வுச்சற் றுயர்ந்த நன்கிரி பெருமாளே

கன்னலம்.

இராகம்,—கரகப்ரியா.] 80. [தாளம்,—சதுர்ஸ்ரஜாதி, திரிபுடை.

புளக மாமுலை ரெண்டு மலுங்கிட
அளக பார மிலங்கி நிலங்கொள
பொருது மீனய னங்கள் சிவந்திட மதமூடே
புறையினு விரு தயங்கள் மதங்கொள
அறிவு ரோஷ மதங்க ளெழும்பிட
புணரு மாமய லங்கு நிரம்பிய வதிகோப
வளமை யாலுயர் மண்டப மண்டிய
துளிர்நி லாவி நிலங்குள பஞ்சணை
வகில்க ளாகெரு முந்திய தம்புகை புடைசூழ
மதன ராக மிசைந்தொரு சங்கித
பதும தால்மன முந்தி மகிழ்ந்திட
மடியின் மேல்விழு கும்ப தனங்கொடு அணைமாதர்
கலையி னேரிதழ் தந்து வழங்கியே
கிளிபு றா மயிலுங் குயிலின் குரல்
தொனியி னேடு முயங்கி மயங்கிட வனுராக
தொழிபி நாக படம்புனை யங்கசு
உழலை யாகிய வல்குல் வருந்தவுஞ்
சுரத லீலை வதங்க ளையுங்கொடு சலியாமல்
விளையு மோக மழுந்தி வருந்தியே
தளர யானு முழன்று தியங்கவோ
விமல னேசர ணங்கள் வழங்கவு மருள்தாராய்
விசய சாகச சம்பிரம சுந்தர
திசைய தாகிய கன்னல மன்னிய
விமல ஞான மிலங்கிய வன்பர்கள் பெருமாளே

கூடல்.

இராகம்,-கமாஸ்.] 81. [தாளம்,-மிஸ்ரஜாதி, ஜெம்பை.

ஆசித்து மோர்வதங்கள் பூசித்து வாமனெங்க
ளாவிட்ட சாசனங்க ளடைவாக
ஆவிக்கு சாதகங்கள் மேவிக்கும் வாசகங்கள்
ஆலிக்க வேமனங்க ளகலாமல்
மாசற்ற நீதிதந்திர தேசுற்ற மூலமந்திர
வாய்மைப்பிர காசமுந்த மறவாமல்
யாசொற் புராணதுங்க தேசச்சி நாகமங்கள்
வாரொக்க வேயடங்க வழிதாராய்
நீசத்து வீசனந்த பாசத்து மாலுமுந்த
நீதத்தி லாதபந்த மறையோனும்
நேரிட்ட மூவருந்தன் பேரிட்ட பாதகங்கள்
நீரொட்டு காரணங்க ளறிவாரோ
பாசத்து ராகமங்க வீசுற்ற சோக துங்க
பாரித்த ணீழிலங்க மகிழ்வோனே
பாருக்கு ளேசிறந்த சீருற்ற கூடல் வந்து
பாடற்கு னேருகந்த பெருமாளே.

தேசூர்.

இராகம்,-எதுகுலகாம்போதி.] 82. [தாளம்,-சதுர்ஸ்யஜாதி, திரிபுடை.

வித்தை யாற்குண மேகி மாதவர்
சித்த பாற்கட லூடு நீடியே
விட்டி டாத்தின மோதி நாதனைந் தலமாக
மிக்க நாற்கதி சாடி மோதியே
தக்க தீர்த்தக ராகி யோடியே
விச்சி யாற்றர ரான வானவ ரணேவோருந்

தத்தி ரத்தகு தாதி தோதகு
துத்த தோத்திகு தோதி தோதிகு
தத்தி தாத்திகு தாதி தாதிகு வெனவேதான்
தக்க நாட்டிய மாடி யேயவ
ரொக்க மீட்டிய வீணை நாரதர்
தத்த பாக்கிய சார மேமன மகிழ்வோனே

உத்த மோத்தம வாதி நாதனே
குற்ற மாற்றிய சோதி நீதனே
உச்சி தோச்சித யோது போதனே கனஞான
உக்கிர மூர்த்தி தயாப ராபர
சக்கிர தூர்த்த வினாச னாசெய
உச்ச சார்த்திய மங்கேச கேவலி யுடனாதா

நித்த மேத்தியே யானு மேயுனை
அர்த்தி யாய்த்தின மோது வேன்நினை
நிச்ச லாட்சியை நீத யாவுட னருள்வாயே
நிஷ்ட ரார்துதி வீறியே புகழ்
பட்ட ரேற்றியே சால வேமகிழ்
நித்தி யோச்சவ தேசூர் மீதுறை பெருமாளே.

ஆயிலப்புரம்.

இராகம்,-கமாஸ்.] 83. [தாளம்,-சதுர்ஸ்யஜாதி, திரிபுடை.

ஆசையா லெடுத்த பொந்தி நாசமே யடுத்த பந்தி
யாகமே புழுச் சொரிந்து மிகநாறும்
ஆனதோ லடுத்தெ லும்பு சேனை ரோக மூற்ற கும்ப
மாவியே நிரைத்த தம்ப மதனூடே

நேசமா யிரத்த மங்கு வாசமா மலத்திர யங்கள்
நீடியே யகத் துளங்கு தனுவூடே
நீடுளே கருத்தி லுஞ்சி நாடியே பிரமித்து மிஞ்சி
நீறுமாய் விடுத்து மஞ்சி யிடுவேனோ

மாசிலா நிரைத்த சந்திர தேசபிராப வித்த சுந்திர
வாலசூ ரியரொத் துகந்த தனுவோனே
வாழியா தெனக்கு கந்து ஆதி கால மிற்றுயர்ந்த
மாறிலாத முத்தி தந்து மகிழ்வாயே
ஈசனே செகத்து யர்ந்த வாசனே மிகப்ப ரந்த
ஏழையோற் கிருபைக் கிசைந்த வருளோனே
ஈடிலா மிகத்துலங்கு நீடுமாயிலப்புரங்கு
ளேகமா யுதித்த வெங்கள் பெருமாளே.

இளங்காடு.

இராகம்,—சுருட்டி.] 84. [தாளம்,—திரிஸ்ரஜாதி, திரிபுடை.

வழங்காப்பெரு வாழ்வது தானது
கிழங்கோட்டடி மாள்வது போலவே
மனம் போற்றியெ ஞானமுன் சீரடி பணியாதார்
வசம்போக்கிய யீனரு மாகியே
அசந்தூர்த்தரும் நீசரு மாயவர்
மடிந்தேற்றுய ரால்மன நாணுவர் நிசமாக
மொழிந்தாட்சிய தோர்ச்சவ ஞதிக
ளிகழ்ந்தோட்டிய தீவினை யால்வர
முழந்தீக்கடை யூலமயு மாகியே தடுமாறி
முடிந்தோட்டிய மாடுக ளாகியே
அடங்காத்துய ரோடவ ரேகியே
முகிந்தாற்றில ரேழ்நர கோடுறை வதுபோமோ
கழிந்தோர்க்கினி தேயரு ளாகியே
குழம்பாற்கறி யோடுயர் போசனங்
கனம்பாத்தவ ராதர வோடருள் செயலாலே
களங்காப்பெரு மாதன தானிய
வளந்தோற்றிய வாபர ணதியுங்
கலந்தேற்றிய வாகன மோடுயர் மடமாதர்

இசைந் தேற்றிய போகவி லாசமுங்
குடைந்தூட்டிய போசன சாரமு
மிசைந்தாப்படி யாகியே மீளவு முயல்வாரே
இடுந்தோத்திர வானவர் கூடியே
அடர்ந்தேற்றியே பாடியே தேடிய
இளங்காட்டினில் மேவியே வாழுயர் பெருமாளே.

இராகம்,-நாட்டக்குறிஞ்சி.] 85. [தாளம்,-சதுர்ஸ்யஜாதி, திரிபுடை.

சந்த னம்புழுகு கந்த மும்பணிதி
தங்கி டும்புளக கொங்கைமார்தன்
தண்டையுங் கதற வெண்டை யஞ்சிதற
தன்சொ லும்பதற விந்தையாக
சிந்தை நைந்துருக வந்து முந்தணைய
செங்கை யங்கிறுக முந்தரோஷஞ்
சென்று வன்கணரை நன்று மங்கையர்கள்
சிந்து சங்கமதி லுந்துவேனோ
அந்த ரம்பரவி வந்து டிந்திரர்கள்
அங்க முங்குளிர வின்பமோடும்
அன்புடன் தொழுது முன்பதம் பணியு
மங்கு சன்றனையே வென்றகோவே
தந்த தந்தனன தந்த தந்தனன
தந்த தந்தனன வென்றுநாளுஞ்
சந்த தம்புகழ வந்திடும் புலவர்
தஞ்சொ லுங்குலவு தம்பிரானே.

டில்லி.

இராகம்,-கமாஸ்] 86. [தாளம்,-சதுர்ஸ்யஜாதி, திரிபுடை.

மதியா னனச்சி புதுவாள் விழிச்சி
மயலை மலைச்சு முழுமாதே

மலையா முலைச்சி கிளைநோ மொழிச்சி
வலையா மகிழ்ச்சி புனையாதே
அதிநூ லிடைச்சி ரதிபோ லுடைச்சி
அழுதா றிகழ்ச்சி க்ருதாதே
அசையா டுமெற்ற தெசநேரு ளொற்று
அதிசோப முற்ற நடையாலும்
புதுநீ லமொத்த குழலே முடித்த
புலமே பிரமித்து மலையாதே
புணர்மா தரிச்சை யினிபாப லுச்சை
புணர்போது லச்சை யதுதானும்
அதமா கசுட்டு வதுபோக விட்ட
அறிவேத சிட்ட மருள்வாயே
அருகேச நல்ல குருநாத சொல்ல
அரிதான டில்லி பெருமானே.

பெருமண்டை.

இராகம்,—ஆனந்தபைரவி.] 87. [தாளம்,—சதுர்ஸ்யஜாதி, திரிபுடை.

வஞ்சத் தெமனுறு சஞ்சற் படுமன
மஞ்சித் திடநிலை குலையாலும்
மைந்தர்க் கதறிட தந்தைத் துடியிட
வஞ்சிக் கொடியிடை முடிசோர
அஞ்சித் தடியினில் நெஞ்சிற் றுயரொடு
அண்டித் தொழுதழ உறவோரும்
அன்பிற் பலவித துன்பத் தொடுமெவ
ரங்குற் றலரிட வுயிர்போகி
துஞ்சப் பிணமதை விஞ்சிக் கொடுசுடு
துன்பத் தினைவிடு புனல்மூழ்கும்
தொந்தத் தறிவிலர் தந்திட்டிடுமதி
துன்பப் பிறவியை ஒழியாயோ

கஞ்சத் தினில்வரு செஞ்சற் சரணென
கந்தர்ப்பனை முடு கிடு வோனே
கண்டத் தொளிபெரு மண்டைப் பதியுறை
கண்கட் களிதரு பெருமாளே.

கொல்லாபுரம்.

இராகம்,-கமாஸ்.] 88. [தாளம்,-சதுர்ஸயஜாதி, திரிபுடை.

மின்னா ருடசெயல் தன்னால் வருவினை
மீரா தேமதி நினைவாலே
மெய்ஞ்ஞா னியரடி நன்ஞா னமதுடன்
மேலா கவேதொழு துடனேயோர்
சன்னா சியுமென பொன்னா சையுமுடன்
றானே வனிதைய ருடனாசை
சந்தே கமுமில மண்தா கமும்விடு
சாதா ரணமுடன் குரோதாதி
நண்ணா கியேவொழி யொண்ணா மதனையும்
நாடா துடனடி சமையாலே
நம்பா தினியுட லம்பே சுடுதினம்
நால்வே தனைநினை யறிவாலே
ஒண்ணா திருவினை நண்ணா முனதுரு
வூடே நிசசுக முடனாவை
உல்லா சசெனுங் கோல்லா புரமதி
லூடே மனமகிழ் பெருமாளே.

இராகம்,-கமாஸ்.] 89. [தாளம்,-சதுர்ஸயஜாதி, திரிபுடை.

கமலா சனமீ தமலா கரனே
கதினா லையுமே பொடியாடுங்
கலைஞா னமுதே நிலைபே றுளனே
கருணா கரனே யறிவோனே

அமரா பதிவா ழிமையோர் குருவே
அருகா வுனதா ளதுபேணி
அதிமோ கமதாய் துதியா டுவரே
யவர்தீ வினையே எரியாடி

சமனு யுனையே ரமைசேர் பவனே
சதுரா பரமா கமசோதி
தலைவா புலவா யிலைநீ யலைகோ
சகமு ணுளரோ எனையாளாய்

உமதே சிறமே யமுதே யுறவே
உனைநான் மறவே னொருநாளும்
உலகா திபனே புலவோர் கணியே
உயர்மோ கரனே பெருமாளே.

பெனுகொண்டை.

இராகம்,-கரகரப்ரியா.] 90. [தாளம்,-சதுர்ஸ்யஜாதி, திரிபுடை.

பலநா ளுமுந்த னலர்பா தமுந்த
பணியா திருந்த பழியாலும்
படுகோ யுசந்து திடமே யசந்து
பதராகி நொந்து மடியேனும்

அலையா தலைந்து நலமே குலைந்து
அசடா கிவந்து கருவூழி
அடியேன் பிறந்து சுடியால் வளர்ந்து
அணைமா தர்தொந்த மதில்மூழ்கி

முலைமீ திணங்கி சிலைமாரனங்கு
முறுகோ பதங்க சரமாலும்
முழுமூ டனஞ்சி பழுதா கும்வஞ்சி
முயலா டுகெஞ்ச முறுவேனோ

கலையா கமங்கள் நிலையாகு முங்கள்
கருணா கரங்க ளருள்தாராய்
கனமே வுகின்ற ஜிநநாத தொண்டர்
க்கிபே ணுங்கோண்டை பெருமாளே.

காரக்குளம். (Karkal.)

இராகம்,—கரகரப்ரியா.] 91. [தாளம்,—சதுர்ஸ்யஜாதி, திரிபுடை.

சோதி யாலெழு ஞான மணித்தையும்
நீதி யாலுணர் ஞான நிதிக்கடல்
சூரத் தொடுமிகு கோரப் பகைவினை
தூரப் பொருதிய அதிவீரா
மாத ராரவ போக விதத்தையுங்
காதி நாலைபு மோதி யடக்கியே
வாகுத் தனேவெகு போகத் தனேமணி
மாசற் றொளிவடி வழகோனே
நீதி யாலுன தாளை யெனக்கருள்
ஆதி நாயகனான செகற்பதி
நீதிக் கிறைவனே யாதிப் பரமனே
நேசக் கடவுளே மகதேவா
வீத ராகவி நாயக கர்க்குண
சீதராசிந ராச சிலாக்கிய
வீரத் துடனொரு காரக் குளமிசை
மேவுத் தமனெனும் பெருமாளே.

பெனிகரை.

இராகம்,—சங்கராபரணம்.] 92. [தாளம்,—சதுர்ஸ்யஜாதி, திரிபுடை.

கரியமுகிலென சொருகு குழலியர்
கலவி மயலினை யொழியாமல்

கலக விழியினை குலவு மதிமுக
களப முலைமயல் — தினமூழ்கி
உருகி யவரொடு மருவி யனுதின
முழலு மடையனை — யினிதாக
உசித நிசபத பசனை மனமதி
லுறுதி பெறமிக — வருள்தாராய்
அரிய திருவற மிரவு பகலுமே
யணுகு மயனையே — தயவூடே
அதிக கருணையே யுதவி யருளிய
அருக சிவபர — மகதேவா
திருவு மருவிய கருணை வடிவனே
செகமு முழுதுண — ரறிவோனே
திசையில் மிகபுக ழிசையு மொருநகர்
திகழும் பேனிகரைப் — பெருமானே.

இராகம்,—ஆரபி.] 93. [தாளம்,—சதுர்ஸ்யஜாதி, திரிபுடை.

சிங்க வாசனந் தங்கு பாதனே
செம்பொ னேந்துமுக் — குடையோனே
சிந்தை யாரவே முந்து யானுனைச்
செஞ்சொ லால்தமிழ்க் — கலையாலும்
பொங்க மாகவு மிங்கு பாடவே
புந்தி சேர்ந்துயர் — கதிதாராய்
பிண்டி நீழலடங் கொண்டு மாரனை
புண்க ளோங்கிடக் — கடிவோனே
சங்க ராதொழும் புங்க வாதியே
சம்பு சாந்தநற் — றயவோனே
தந்தை யேசிறந் தந்த பாதனே
தங்க மோங்குநற் — றனுவோனே.
கொங்கை மாதர்தஞ் சங்கை மோதியே
கொண்ட வேந்தே — கற்பகமாலே

கொஞ்சி யோங்கி நின்சஞ்ச பாதமே
கொண்ட சாந்தநற் பெருமாளே.

சம்மேதகிரி.

இராகம்,-கமாஸ்.] 94. [தாளம்,-சதுர்ஸ்யஜாதி, திரிபுடை.

திருத்தத் துடனுனை வருந்தித் தொழுபவர்
சிறப்புத் துறக்கம தருள்வோனே
செகத்துக் கொருவனே சுகத்துக் குரியனே
திரத்துப் பரமனே முனிநாதா
பெருத்தப் புகழுடை கருத்துற் றிடுவனே
மனத்துற் றவலர்சொல் முனிவோனே
பிசக்குப் படுமொரு வசைக்குற் றுணுகனே
பிரதிஷ்டைக் கணுகிய சுரநாதா
விரித்த சிநநெறி நிருத்தப் படிமன
விதத்தைத் தருபுரு பரமேசா
வினைக்குப் பகைவனே நினைக்கச் சுகமருள்
விகற்பத் தினையொழி யறிவோனே
மரித்தற் பிறகெனை யொருத்தற் கருவழி
வசப்பட் டிடுவினை யகல்வாயே
வடக்குத் திசையினில் சுடர்க்கொற் றெனவொளிர்
மகச் சம்மேற்கிரி பெருமாளே.

மரக்குணம்.

இராகம்,-நாட்டக்குறிஞ்சி.] 95. [தாளம்,-அடதாள சாபு.

நெருக்குமிரு பெருப்பகையை
கெடுத்தொளிமுக் குடைக்கினிய
நெறிச்சதுரர் திறத்தருக ணிட்டானே

நினைத்திடுபத் தரைத்தயவிற்
றிருத்திடுமுத் தியிற்கடுக
நிசத்துருவைக் கொடுக்குமரு ளுடையோனே

பெருத்தபவத் திருத்தியெனைப்
படுந்துயரைக் கடக்கரிய
பெலக்கமலத் துலத்திடுபொற் பதமேதான்

பிறத்திலொரு துருத்தரிட
சரித்திரத்துட் படுப்பதிலைப்
பினைத்தியுனைத் தொழக்கடவே னெனையாளாய்

திருக்கமலத் தொருத்தனுனக்
கிணைக்குலகிற் கிடைப்பதிலைச்
செகத்குருவே பரப்பிரம சிவதேவா

செழித்தமறை தழைத்தொளிர
திறத்தில்விரித் தரைத்திடுவைத்
திருக்கேவலத் தொருத்தியிட மணவாளா

இருப்பவனுத் திருப்புகழைப்
படித்திடு பத்தருக்கருளை
யிணக்கிடுவைக் குணக்கடவு ளிறையோனே

எனக்கருளை கனக்கருளி
பிறப்பையொழித் திடப்புரிவை
யிருக்கும்பரக் குணத்துறையும் பெருமாளே.

குறக்கோட்டை.

இராகம்,—கமாஸ்.] 96. [தாளம்,—சதுர்ஸ்யஜாதி, திரிபுடை.

ஆரமுலை காட்டி வேலைவிழி தீட்டி
யாடைநெகி ழோட்டி மயலாலும்

ஆடவரை கோட்டி சாலமிக வாட்டி
ஆசைவலை பூட்டி யிதமூறல்

சேரவமு தாட்டி சாலவுற வாட்டி
தீமையினை மூட்டு மடமாதர்

தீவினையை காட்டி லோடிமுழு காட்டி
சேருழலை யாட்டி யிடுவேனே
பாரவினை காட்டை மாளவனல் மூட்டி
பாவமய லோட்டு மதிவீரா
பாவிமத னீட்டை மோதிசிறை யூட்டி
பாதகமே யோட்டும் புனிதேசா
தீரசுகு ணட்டி சாலகரு ணட்டி
தேவபர மேஷ்டி யருளாளா
சீர்பெரிய நாட்டி லோலமுள பாட்டிற்
றேறு சுறகோட்டை பெருமாளே.

வைலாமூர்.

இராகம்,-எதுகுலகாம்போதி.] 97. [தாளம்,-மிஸ்ரஜாதி, ஜெம்பை.

ஸ்ரீசிங ணனசித்த பாசுர பூப்பிரசித்த
ஸ்ரீயரு கேசசுத்த ரவிதேசா
தேவசு ரேசமுத்த பாவவி லாசநித்த
தீவினை தூரகற்றும் பரமேசா
பூசித லோகமுற்ற யீசசர் வேசபுத்த
பூமிசை வாசமுற்ற புனிதேசா
பூரித பாதபத்தர் பாரித சாதனத்துள்
பூரண மாகவைத்த வருளோனே
ஆசையி னுலொருத்தர் நேசித மானபத்தர்
ஆதர மாகுமுத்தி யருள்வோனே
ஆபர ணதியுற்று சோபையி னல்மிகுத்த
ஆதிசி நேசநித்த நிசரூபா
கா.சினியோர் மிகுத்த மோசையி னல்வகுத்த
காரண காதிமுற்றுங் கடிவோனே
காலனை யேதுரத்துங் கோலபெ லாதிகற்றுங்
காதல்வை லாமுருத்த பெருமாளே.

இராகம்,–ஆனந்தபைரவி.] 98. [தாளம்.–சதுர்ஸ்யஜாதி, திரிபுடை,

சிலைமத னாலும் முலைமட வார்தஞ்
செயலதி லூழ்கி மயலாகி
தினமவ ரோடுந் தனதுள நாடுந்
தெறிகெடு மூட மெனவேதான்
நலையமிர் தேனுஞ் சுளையிதழ் தானும்
அகமகிழ் கோதங் கடையேன்நான்
அவருட காதல் சிவமென நாளும்
அழிமய லாகு மனுபோகங்
கலையணி நாகம் நிலைபட மாறுங்
கடிதுடை யோகங் குடியாகி
கருமிக வூறுஞ சொரூபமும் நாலுங்
கரைபடுந் துவாரந் தனிலாசை
வலையினி நாளும் நிலைதடு மாறும்
அசமழி பாவந் தனைசாடி
வகையுட னேயுன் விகசித மாகும்
மலரடி சேரும் பெருமாளே.

இராகம்,–பியாக்.] 99. [தாளம்,–சதுர்ஸ்யஜாதி, திரிபுடை.

பாவிமத னைந்து தாவகணை வந்து
பாவியுடல் நொந்து தடுமாறி
பாரமுலை மங்கை மாரொடு மயங்கி
பாலதர முண்டு மயல்மூழ்கி
ஆவிலிலை ணைந்து பாவியு மிகுந்த
வாசையி லடைந்து கெடுவேனோ
ஆறுதலை யண்ட வேறுசர ணுண்டோ
ஆதர வுகந்து மருள்வாயே
தேவர்தொழ வந்த கேவலனே யுந்தன்
சீர்பத மகிழ்ந்து பணிவோரை
தீவினை கடிந்து ஞவியுற முந்த
சேரவருள் தந்த அவதாரா

நாவல முகந்து பாடவு முயர்ந்த
நாயகனே யந்த மூளசோதி
ஆசைபவ தொந்த யீசவ ருகந்த
ராசச மிகுந்த பெருமாளே.

இராகம்,-ஆனந்தபைரவி.] 100. [தாளம்,-மிஸ்ரஜாதி, ஜெம்பை.

சகல ஞான கலாப சுகவி லாச சலாப
சதுர மோகன சாப பரமேசா
தலைவ னுன மகேச புலவர் தேடு குலேசா
சருவ சீவ தயேசா பவநாசா
அகில லோக விசார விகட காதி விதூர
அதித யாள சுசார சுகுணேசா
அமர ராச வுலாச சமவ சாரண தேச
அதிக மான கைலாச கிரிவாசா
உகமை யாகவே கேளும் வகைப தாகவே நாளும்
உசித மாகவே யாளும் சருவேசா
உறுதி யாவனும்நீயே கிருபை யாயனும் வாயே
வுணர்வை யேதரு வாயே அவனீசா
செக விலாச நீதான தகைவி லாதவ னுன
திறமை யாகிய ஞான செகதீசா
திலத கேவலி நாதா பலித வாகம நீதா
திரிசெக நாத விதாதா பெருமாளே.

திருமலை.

இராகம்.-கல்யாணி.] 101. [தாளம்.-சதுர்ஸ்யஜாதி, திரிபுடை.

திங்கள்முக்குடைநிழலில் திருவாகி
திகழுபூந்தனைத்தேவர் பணிவாரே;
செங்கமலத்தேயுறைந்த ஜினத்தேனே
சிந்தனைசெய்சேயனுக் கருள்வாயே;
பங்கப்படமாரனைவெல் லிடுவோனே
பழுதிலாவாகமம் பயந்தோனே;
எங்கும்புகழோங்குந்திரு மலைமீதே
தங்கிடும் நற் சிகாமணிப் பெருமாளே.

ஜினேந்திர ஞானத்திருப்புகழ்
[முற்றிற்று.]

இஃது பதிப்பாசிரியர், மே. சக்கிரவர்த்தி நயினாரால் பாடப்பெற்றது.

அமெரிக்கன் ஆர்காட் மிஷன் பிரஸ், ஆரணி.

ஸ்ரீ

ஸ்ரீஜிநாயநம:

ஜிநேந்திர ஞானத் திருப்புகழ்.

பொருள் விளக்கம்.

1. **பிரபாவலயம்** மூன்றுவன:—ஆலோகம், பிரபாமூர்த்தி, கங்பிரபை. சத்திரத்திரயம்=முக்குடை—
   எண்பகை:—ஞானுவரணீயம், தரிசனுவரணீயம், வேதநீயம், மோகநீயம், ஆயுஷ்யம், நாமம், கோத்திரம், அந்தராயம். ஆகிய கர்மங்கள்.

பெருமாள்=பெருமையிற் சிறந்தோன்

2. சிராவகர் நிலை: 1. தர்சநிகன், 2. விரத், 3. சாமாயிகன், 4. ப்ரோஷதோபவாசன், 5. ஸச்சித்தவிரதன், 6. ராத்ரியபுக்தன், 7. பிரமசாரி, 8. அநாரம்பன், 9. அபரிக்கிரகன், 10. அநுமதி, 11. உத்திட்டபிண்டன்.

   பதினோர் நிலைமையர் சாவக ரென்று
   விதியி னுணரப் படும். —அருங்கலச்செப்பு.

   விரதம்: அணுவிரதம், குணவிரதம், சிக்ஷாவிரதம்.

   அணுவிரதம்:—கொலை, பொய், களவு, பிறர்மனை நயத்தல், விபரீத பரிக்கிரகம், ஆகியவற்றை விடுதல்.

   குணவிரதம்.—திக்கு விரதம், அநர்த்ததண்டவிரதம், போக உபபோகபரிமாணம்.

சிக்ஷாவிரதம் :—தேசர்வகாயிகம், ஸாமாயிகம், புரோஷ தோபவாஸம், வைபயாப்பிரத்தியம்.

அர்ச்சனைவிதம் :—நீர், சாந்து, அக்ஷதை, பூமாலை, திருவமுது, தீபம், தூபம், பழம்.

விரைகமழ் நீர் சாந்தரிசி மேதகப்பூந் தாமம்
திருவமுது தீபமொடு தூபம்—தருகனியும்.
(சீவசம்போதனை.)

3. வேதம் நான்கு :—பிரதமாநுயோகம், கரணாநுயோகம், சரணாநு யோகம், திரவ்யாநுயோகம்.

ஞானம் ஐந்து:—மதிஜ் ஞானம், (இந்திரியவறிவு) சுருத ஞானம், (நூலுணர்ச்சி) அவதி ஞானம்,(தனதுமுன்பிறப்பையறிதல்.) மனப்பரியயஞானம். (தனதும் பிறரதுமாகிய முன்பிறப்பை யறியும் ஞானம்.) கேவலஜ் ஞானம் (த்ரிகால வுணர்ச்சி.)

4. மதனது ஐந்துபாணங்கள் : தாமரைப்பூ, (உன்மத்தம்.) மாம்பூ, (மதனம்) அசோகம்பூ, (மோகம்.) முல்லைப்பூ, (சந்தாபம்.) நீலோற்பலப்பூ, (வசீகரணம்.)

5. சமவ சரணம் : இஃது பூமிக்கு ஐயாயிரம் வில்லுயரத்திற்கு மேலே பன்னிரண்டு யோசனையளவுள்ளதாய்ச் சௌதரு மேந்திராதி தேவர்களால் நிருமிக்கப்பட்ட சிநாலயம். இவ் வாலயத்தின் இயல்பை ஸ்ரீபுராணத்தும், மேருமந்தர புரா ணத்தும் பரக்க விரிக்கப்பட்டுள்ளன.

6. சங்கங்கள் நான்கு :—முனிகள், ஆரியாங்கனைகள், சிராவகர் கள், சிராவகிகள்.

நான்குதானம் : ஆகாரதானம், அபயதானம், சாஸ்திரதானம், ஔஷத தானம்.

11. எயில்-மதில் ; மதில் மூன்றாவன :— உதயதரம், பிரீதிதரம், கல்யாணதரம்.

12. கர்மங்கள் இரண்டு :—காதி, அகாதி.
காதிகர்மம் நான்கு :— ஞானவர்ணீயம், தர்சனவர்ணியம், மோஹநீயம், அந்தராயம். அகாதி கர்மம் :—வேதனீயம், நாமிகம், கோத்திரகம், ஆயுஷ்யம்.

13. அருகந்தர் :— ஜினன், கேவலன், பரமேஷ்டி, ஆதிச்வரர், புத்தர் இவ்வபிதானங்கள் தேவாதி தேவராம் அருகர் ஒருவரையே குறிப்பன.

அகாதி கர்மங்கள் நான்கு :—ஆயுஷ்யம், வேதநீயம், கோத்ரம், நாமம்.

அருகனுக்கு நான்குமுகம் : "பூமலி யசோகின் புனை நிழலமர்ந்த நான்முகற்றொழுதுநன் கியம்புவ னெழுத்தே." நன்னூல் விருத்தியுரையில் இதன் இலக்கணம் காண்க.

17. பஞ்சமந்திரம் : ஓம் ணமோ அரஹந்தாணம். (அருகர்)
,, ,, சித்தாணம் (சித்தர்)
,, ,, ஆயரியாணம் (ஆசாரியர்)
,, ,, உவஜ்ஜாயாணம் (உபாத்தியாயர்)
,, ,, ளோயே, ஸவ்வ, ஸாஹோணம், (ஸாதுக்கள்.)

நவமந்திரம் :— அரகந்தர், சித்தர், ஆசாரியர், உபாத்தியாயர், ஸர்வ சாதுக்கள், ஜிநதர்மம், ஜிநஸ்ருதம், ஜிநசைத்யம், ஜிநசைத்யாலயம் :—

18. இருவினை :—நல்வினை, தீவினை.

19. கற்பகதரு :—மத்யாங்கம், தூரியாங்கம், பூஷணாங்கம், மாலியாங்கம், குஸுமாங்கம், தீபாங்கம், ஜ்யோதிராங்கம், க்ருஹாங்கம் போஜநாங்கம், பாஜிராங்கம், வஸ்த்ராங்கம்.

சாதி ஐந்து (ஓர் சாதிநாலையு) ஏகேந்திரியம், த்வீந்திரியம் த்ரீந்திரியம், சதுரிந்திரியம், பஞ்சேந்திரியம்.

25. நரகம் எழு :— 1. இருளிலிருள். தமத்தமப்பிரபை.
2. இருள். தமப்பிரபை.
3. புகை. தூமப்பிரபை.
4. சேறு. பங்கப்பிரபை.
5. மணல். வாலுகாப்பிரபை.
6. பரல். சக்கரப்பிரபை.
7. ஒளி. ரத்தினப்பிரபை.

கலியாணம் ஐந்து :—சுவர்க்காவதாரணம், ஜன்மாபிஷேகம், பரிநிஷ்கிரமணம், கேவலஞ்ஞானம், பரிநிர்வாணம்.

26. கதி நான்கு :—நரககதி, திரியக்கதி, மனுஷ்யகதி, தேவகதி.

28. பரமாகமம் மூன்று :— அங்காகமம், பூர்வாகமம், பகுசுருதியாகமம் அவை பன்னிரண்டும், பதினான்கும், பதினாறுமாக நாற்பத்திரண்டு.

31. குணம் :— கடையிலாவறிவு, கடையிலாக்காட்சி, கடையிலாவீரியம், கடையிலாவின்பம், நாமமின்மை, கோத்திரமின்மை, ஆயுவின்மை, அழியாவியல்பு.

32. அறம் :— இல்லறம், துறவறம்.

33. தேவர்வகை:—பவணர், வியந்தரர், ஜோதிஷ்கர், கற்பவாஸிகள்.

36. மூடம் :—உலகமூடம், பாஷண்டிமூடம், தெய்வமூடம்.

38. பன்னிரண்டு கணம் :—முநிவரர், ஆர்யாங்கனைகள், கொலையைவிட உடன்பட்ட விலங்குஜாதி, பவணர், வியந்தரர், சோதிடர், கற்பவாஸியர், பவணர்மனைவியர், வியந்தரர்மனைவியர், சோதிடர்மனைவியர், கற்பவாஸியர்மனைவியர், சக்கரவர்த்திகள்.

39. உலகம் எழு :—நாகலோகம், பவணலோகம், நரலோகம், ஜோதிர்லோகம், கல்பலோகம், அகமிந்திரலோகம், மோக்ஷலோகம்

42. திரிலோகம்:—சுவர்க்கம், மத்தியமம், பாதாளம்.

44. நூறிந்திரர் (சதசுரர்.) பவணேந்திரர்நாற்பதின்மர், வியந்த ரேந்திரர் முப்பத்திருவர், ஜோதிஷ்கேந்திரர் இருவர், கற் பேந்திரர் இருபத்து நால்வர், நரேந்திரன் ஒருவன், மிருகே ந்திரன் ஒன்று.

49. தபம்:—தபங்கள் இரண்டு, அவை பன்னிரண்டு வகைப்படும்.

1. பாஹ்யதபம், 2. அந்தரங்கதபம்.

பாஹ்யதபசு ஆறு:— அநசனம், ஆவமோதர்யம், ப்ரத்திபரிஸங்கியானம், ரஸபரித்தியாகம், விவத்தசய்யாஸனம், காயக்கிலேசம்.

அந்தரங்க தபசு ஆறுவன:—ப்ராயச்சிதம், விநயம், வையாப்பிரத்தியம், ஸ்வாத்தியாயம், வ்யத்ஸர்கம், தியானம்.

50. கஷாயம் நான்கு:—

1. அநந்தானுபந்தி குரோதம், மாநம், மாயை, லோபம், 4.
2. அப்ரத்யாக்கியானக்குரோத, மாந, மாயை லோபம். 4.
3. ப்ரத்யாக்யான, குரோதம், மாநம், மாயை லோபம். 4.
4. ஸஞ்ஜ்வலந, குரோதம், மாநம், மாயை, லோபம். 4.

51. மறு ஆயிரத்தெட்டு:—பத்மம், சங்கம், மத்ஸ்யம், ஸ்ரீவத்ஸம்முதலிய இரேகைகள் நூற்றெட்டும், மஸூரிகை முதலிய அடையாளங்கள் தொளாயிரமும் ஆக ஆயிரத்தெட்டென்றும், ஸ்வஸ்திகம் நந்தியாவர்த்த முதலிய இரேகைகள் நூற்றெட்டும், மஸூரிகை முதலிய அடையாளங்கள் தொளாயிரமும் ஆக மறுக்கள் ஆயிரத்தெட்டென்றும் நூல்கள்கூறும்.

67. தீர்த்தங்கரர்:—ஸ்ரீவ்ரஷப, அஜித, சம்பவ, அபிநந்தன, சுமதி பத்மப்ரப, சுபார்ஸ்வ, சந்திரப்ரப, புஷ்பதந்த, சீதல, ஸ்ரேயாம்ஸ, வாஸுபூஜ்ய, விமல, அநந்த, தர்ம, ஸாந்தி, குந்து, அர, மல்லி, முநிசுவ்ரத, நமி, நேமி, பார்ஸ்வ, மஹாவீரனெனதீர்த்தங்கரர் இருபத்துநால்வர்.

74. ஐம்புலம் :—சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரஸம், கந்தம்.

75. அறுசுவை:—கைப்பு, கார்ப்பு, துவர்ப்பு, புளிப்பு, உப்பு, மதுரம்.

95. முக்குடை :—சந்திராதித்யம், நித்யவிநோதம், ஸகலபாஜநம்.

96. பரமேஷ்டிகள் :—அருகர், சித்தர், ஆசாரியர், உபாத்தியாயர், சர்வசாதுக்கள்.

97. காரணகாதி முழுதும் (நூற்றுநாற்பத்தெட்டு கருமங்கள்.)

ஞானவரணீயம், தரிசனவரணீயம், வேதநீயம், மோஹநீயம், ஆயுஷ்யம், கோத்திரம், அந்தராயம் என மூலப்பிரகிருதி 8.

மதிஞானவரணீயம், சுருதஞானவரணீயம், அவதிஞானவரணீயம், மனப்பரியய ஞானவரணீயம், கேவலஞானவரணீயம், என ஞானவரணீயம் 5.

ஸக்ஷுர்தர்சனவரணீயம், அஸக்ஷுர்தர்சனவரணீயம், அவர்த்திதர்சனவரணீயம், கேவல தர்சனவரணீயம், நித்திராதரிசனவரணீயம், நித்ரா நித்ராதர்சனவரணீயம், ப்ரசலாதர்சனவரணீயம், ப்ரசலா ப்ரசலாதர்சனவரணீயம், ஸ்த்யாநக்ரந்திதர்சனவரணீயம் எனத்தர்சனவரணீயம் 9.

ஸாதவேதநீயம், அஸாதவேதநீயம், எனவேதநீயம் 2.

மித்யாத்வம், ஸம்யக்மித்யாத்வம், ஸம்யக்பிரகிருதி, அநந்தானுபந்திக்ரோதம், மானம், மாயை, லோபம், அப்பிரத்யாக்யானக்குரோதம், மானம், மாயை, லோபம், பிரத்யாக்யானக்குரோதம், மானம், மாயை, லோபம், ஸஜ்வலனக்ரோதம், மானம், மாயை, லோபம், ஹாஸ்யம், ரதி, அரதி, சோகம், பயம், ஜுகுப்ஸை, ஸ்த்ரீவேதம், பும்ஸவேதம், நபும்ஸவேதம் என மோஹநீயம் 28.

நரகாயுஷ்யம், திர்யகாயுஷ்யம், மநுஷ்யாயுஷ்யம், தேவாயுஷ்யம் என ஆயுஷ்யம் 4.

நரககதி, திர்யக்கதி, மநுஷ்யகதி, தேவகதி என கதிநாமம் 4.

ஏகேந்திரியம், த்வீந்திரியம், த்ரீந்திரியம், சதுரிந்திரியம், பஞ்சேந்திரியம் என இந்திரிய நாமம் 5.

ஔதாரிகம், வைக்ரீயிகம், ஆஹாரகம், தைஜ்ஸம், கார்ம்மணம் எனச்சரீரநாமம் 5.

ஔதாரிகாங்கோபாங்கம், வைக்ரீயிகாங்கோபாங்கம், ஆஹாரகாங்கோபாங்கம் என அங்கோபாங்கம் 3.

ஔதாரிக பந்தனம், வைக்ரீயிக பந்தனம், ஆஹாரகபந்தனம், தைஜஸபந்தனம், கார்ம்மணபந்தனம் எனப்பந்தன நாமம் 5.

ஔதாரிக ஸங்காதம், வைக்ரீயிக ஸங்காதம், ஆஹாரக ஸங்காதம், தைஜஸஸங்காதம், கார்ம்மணஸங்காதம், என ஸங்காதநாமம் 5.

சமசதுரச்ரஸம்ஸ்தானம், நியக்ரோத ஸம்ஸ்தானம், ஸ்விதிஸம்ஸ்தானம், வாமன ஸம்ஸ்தானம், குப்ஜ ஸம்ஸ்தானம், ஹுண்டஸம்ஸ்தானம் என ஸம்ஸ்தான நாமம் 6.

வஜ்ர ரிஷப நாராச ஸம்ஹநநம், நாராச ஸம்ஹநநம், அர்த்தநாராச ஸம்ஹநநம், கிலித ஸம்ஹநநம், அஸம்ப்ராப்தா ஸம்ஹநநம், அஸ்ரபாடிகா ஸம்ஹநநம் என ஸம்ஹநந நாமம் 6.

ஸ்நிக்தஸ்பரிசம், ரூக்ஷஸ்பரிசம், சீதஸ்பரிசம், உஷ்ணஸ்பரிசம், குருஸ்பரிசம், லகுஸ்பரிசம், மிருதுஸ்பரிசம், கர்க்கஸ்பரிசம் என ஸ்பரிசநாமம் 8.

திக்த ரஸம், கடக ரஸம், கஷாய ரஸம், ஆம்ர ரஸம், மதுர ரஸம் என ரஸநாமம் 5.

ஸுகந்தம், துர்க்கந்தம் என் கந்தநாமம் 2.

சுவேதவர்ணம், பீதவர்ணம், ஹரிதவர்ணம், அருணவர்ணம், கிரு ஷ்ணவர்ணம் என வர்ணம் 5.

நரககத்யாநுப்பிராப்தி, திர்யக்கத்யாநுப்பிராப்தி, மனுஷ்யகத்யாநுப்பிராப்தி, தேவகத்யாநுப்பிராப்தி என கத்யானுப்பிராப்தி 4.

அகுருலகு உவகாதம், பரகாதம், ஆதபம், உத்தியோதம், உச்சுவாஸ நிச்சுவாஸம், பிரசஸ்தவிஹாயோகதி, அப்பிரசஸ்த விஹாயோகதி, பிரத்தியேக சரீரம், ஸாதாரண சரீரம், த்ரஸ நாமம், ஸ்தாவரநாமம், சுபநாமம், அசுபநாமம், சுபகந்துர்ப்பகம், ஸுஸ்வரம், துஸ்வரம், ஸூக்ஷமம், பாதரம், பர்யாப்தி, அபர்யாப்தி, ஸ்திரம், அஸ்திரம், ஆதேயம், அநாதேயம், யசஸ்க்கீர்த்தி, அயசஸ்க்கீர்த்தி, நிர்ம்மாணம், தீர்த்திகரத்துவம் என நாமம் 29. ஆக 148.

ஸ்ரீ

ஜிநேந்திர ஞானத் திருப்புகழ்

செய்யுள் முதற்குறிப் பகராதி.

செய்யுள்.	பக்கம்.	செய்யுள்.	பக்கம்.
அகத்தினிலிருக்கும்	43	கரியமுகிலென	72
அத்தமாஙடக்குலவு	20	கருத்த குஞ்சியு	35
அமரரு மருமறை	27	களபமுலைபார	45
அமரர்கள் சுத்திப்	28	கற்கண்டென	55
அமரலோகனுராட	32	கனகவிழிமங்கை	3
அம்புயமீதினி	22	கனம்பால்தடம்	6
அம்புவிழியாலுங்	55	கனத்திரும்பலு	57
அளகபாரமுங்	38	கன்னியருடமுலை	31
அன்னமின் நடை	41	காதிவினை கெடுக்கும்	26
ஆசித்தேயொரு	4	குயவனுக்கிய	49
ஆசித்துமோர்வதங்	65	குலவுகுங்கும	11
ஆசையாலெடுத்த	66	கொடாமலொரு	8
ஆரமுலைகாட்டி	75	கொலைபொய்கள	49
ஆலகாலக்கொடிய	57	கோலபங்கயமீதே	24
ஆதிபரன்சிந	18	கோலமதசத்தி	10
இருவினைகளீட்டி	16	சகலஞானகலாப	78
உடலின்மேற்பிரிய	60	சந்தனம் புழுகு	68
உயருடல் தனுவுக்	33	சிங்கவாசனந்	73
உலகுயர் சுதியைச்	48	சித்தி முத்தித்திருவை	48
உலகமதிலே செனிக்	51	சிநராசமகேச	23
ஒருநாளுமுந்த	30	சிநவரனடியே	12
ஒளிமணிதெற்றித்	63	சிரித்து மாமய	12
கமலத்திடைபுக்	9	சிலைமதனுலும்	77
கமலாசனமீ	70	சிலைகாமனுற்றத்	59

செய்யுள்.	பக்கம்.
சீதமாமதி	13
ஸ்ரீ சிருஞானசித்த	76
சுருதியடங்க	34
சுருதியாலேற்ற	54
செசமதனிலே	19
சோதியாலெழு	72
தருமதயாளச்	36
திங்கள் முக்குடை	79
திருத்தக்கப்பெருத்	53
திருத்தத்துடனுனே	74
திருமருவு விஞ்சு	50
தோகையர்க்கிசைந்	23
தோதகமிஞ்சி	25
நல்ல ஞானத்துநெறி	61
நாலுசங்க மூலமாதி	5
நெருக்கு மிருபெருப்	74
நெருக்குமிருந்துருக்	47
பகவசங்கர	44
பட்டத்துராச	18
பத்தர் மனப்ரிய	45
பத்தர்க்கினி	61
பந்துமாமுலே	37
பலநாளுமுந்த	71
பாகுமொழி மாதர்	3
பாரமாமத	16
பாரதனங்கொடு	19
பாவிமதனைந்து	77
புருபரமகேச	46
புளகமாமுலே	64
பெரியகுலந்தரித்	25

செய்யுள்.	பக்கம்.
பேர்பெரிய சூட்ட	58
பொங்கிய வாள்விழி	57
பொறிவழிப்	62
பொறிஞகைமுமா	42
பொற்பதத்தினைத்	40
மணிக்கும்பந்	7
மதியாணணச்சி	68
மலர்தாமரை	52
மின்னுருடசெயல்	70
முத்துப்பல	1
முப்புவி யுணர்மதி	8
முல்லேக்கு நேர்	42
மெத் தவரு	21
வஞ்சத்தெமனுறு	69
உண்டேகொண்டார்	52
வழங்காப்பெரு	67
விட்டது பேராரை	30
வித்தையாற்சுண	65
விரக மிராப்பக	29
விரதசீல ஆசார	2
வேதமந்திர	15
வேதாகமநெறி	39

ஜிநேந்திர ஞானத் திருப்புகழ்.

இந்நூலில் வந்துள்ள திருப்பதிகளின் பெயர்.

	பக்கம்.
அகலூர்	48
அருசாவூர்	45
ஆயிலப்புரம்	66
ஆரணி	32
இடையாலையம்பதி	15
இளமங்கலம்	55
இளங்காடு	67
இறையூர்	30
எயில் (எய்யில்)	48
ஒம்புசம்	24
கச்சி	4
கரந்தை	18
களசை	8
களபலூர்	51
கன்னலம்	64
காசி	60
காரக்குளம்	72
கிரி	9
குழசை (கொழப்பலூர்)	34
குளத்தணி நகர்	62
குறக்கோட்டை	75
கூடல் (கூடலூர்)	65
கொல்லாபுரம்	70
சம்மேதகிரி	74
சித்தைப்பதி	1
சிராவண பெளிகுளம்	27
செஞ்சி	59
சேரி	52
சேவூர்	42
டில்லி	68
தச்சை நகர்	21
தச்சூர்	53
தாசை	18
திருநறுங்கொண்டை	3
திருப்பரம்பாபுரம்	6
திருப்பேராவூர்	12
திருமலை	79
திருத்திபை	11
தேசூர்	65
நன்கிரி	63
பெருதிருக்கோவில்	54
பெருமண்டை	69
பெருமுகை	40
பெனிகரை	72
பெனுகொண்டை	71
பொன்னூர்	61
மரக்குணம்	74
முதல்நகர்	39
மோதைமாநகர்	16
வங்காரம்	52

	பக்கம்.		பக்கம்.
வளத்தி	58	விழுக்கம்	23
வாழை	30	வேலூர்	57
விதுரை	26	வைலாமூர்	76
விருதூர்	56		

O3:417
N20

M. சக்கிரவர்த்தி நயினர்,
சரஸ்வதி விலாஸ புஸ்தகசாலை,
21, பாரீஷ்—வெங்கடாசலையர் தெரு,
☞ ஜி. டி. சென்னை.

புத்தக விளம்பரம்.

இலக்கண இலக்கியங்கள்.

சீவகசிந்தாமணி மூலமும் உரையும் ...	6	0	0
சிலப்பதிகாரம் உரையுடன் ...	(அச்சில்)		
மணிமேகலை உரையுடன் ...	5	8	0
சூளாமணி மூலம் ...	2	8	0
ஷை கருத்துக்குத்தெளிவுரை ...	0	12	0
நன்னூல் மயிலைநாதருரை ...	3	2	0
நன்னூல்காண்டிகையுரை ...	1	8	0
நன்னூல்விருத்தியுரை ...	2	0	0
நேமிநாதம் உரையுடன் ...	(அச்சில்)		
வீரசோழியம் உரையுடன் ...	(அச்சில்)		
யாப்பருங்கலக்காரிகை ...	1	8	0
யாப்பருங்கலவிருத்தி முதல்பாகம் ...	3	8	0
ஷை இரண்டாம்பாகம் ...	3	8	0
சூடாமணிநிகண்டு உரையுடன் ...	1	8	0
பதிஞேராவது நிகண்டு உரையுடன் ...	0	10	0
மேருமந்தரபுராணம் 1-வது சருக்கம் உரையுடன்	0	6	0
ஷை 2-வது சருக்கம் ...	0	5	0
ஷை 3-வது சருக்கம் ...	0	6	0
நைடதம் உரையுடன் ...	2	8	0
ஷை மூலம் ...	0	13	0
நளவெண்பா மூலம் ...	0	6	0
நளவெண்பா மூலமும் உரையும் ...	1	4	0
அரிச்சந்திரபுராணம் ...	1	4	0

திருக்கலம்பகம்	...	(அச்சில்)		
திருப்பாமாலை	...	(அச்சில்)		
ஜினேந்திரஞானத் திருப்புகழ்	...	0	8	0
டீகா அமரம் (கிரந்தம்)	...	1	6	0
திருநூற்றந்தாதி	...	0	6	0

நீதி நூல்கள்.

நாலடியார் உரையுடன்	...	2	2	0
நாலடியார் மூலமும் அரும்பதவுரையும்	...	0	10	0
திருக்குறள் மூலம்	...	0	4	0
திருக்குறள் மூலமும் உரையும்	...	4	0	0
பழமொழி நானூறு உரையுடன்	...	2	2	0
அறநெறிச்சாரம்	...	0	6	0
ஏலாதி உரையுடன்	...	0	6	0
சிறுபஞ்சமூலம் உரையுடன்	...	0	5	0
இனியது நாற்பது விருத்தியுரையுடன்	...	0	3	6
இன்னா நாற்பது உரையுடன்	...	0	3	6
களவழி நாற்பது ஷை	...	0	3	0
கார் நாற்பது ஷை	...	0	3	0
முதுமொழிக்காஞ்சி ஷை	...	0	3	0
திரிகடுகம் உரையுடன்	...	0	5	0
ஆசாரக்கோவை உரையுடன்	...	0	9	0
நான்மணிக்கடிகை ஷை	...	0	6	0
நீதிநெறிவிளக்கம் ஷை	...	0	6	0
நீதிவெண்பா ஷை	...	0	3	0
இன்னிலை ஷை	...	0	13	0
ஆத்திசூடி நீதிவெண்பா உரையுடன்	...	1	0	0
நரிவிருத்தம் உரையுடன்	...	(அச்சில்)		

வசனநூல்களும், நாவல்களும்,

சீவகசிந்தாமணி வசனம்	...	1	4	0
சூளாமணி வசனம்	...	1	0	0

ஜீவகன் (நாவல்)	...	1	0	0
ஆதிசூடி நீதிக்கதைகள்	...	0	8	0
கனகமாலை	...	1	4	0
கனகபூஷணம் 2 பாகங்கள்	...	2	0	0
கமலசேகரன்	...	1	4	0
தினகரசுந்தரி	...	0	12	0
ரத்னபுரிரகசியம்	...	3	4	0
குசேலோபாக்கியான வசனம்	...	1	0	0
வீரநாதன்	...	0	12	0
மதனபூஷணம்	...	1	0	0
சொர்ணாம்பாள் அல்லது பெருவிரல்மர்மம்	...	0	10	0
தேவசுந்தரி	...	0	14	0
சகோதரவாஞ்சை	...	0	4	0
பத்மாசனி	...	0	10	0
கற்கோட்டை	...	1	12	0
ஆனந்தசிங்	...	1	12	0
மின்சாரமாயவன்	...	1	8	0
பூங்கோதை	...	(அச்சில்)		
அம்புஜாக்ஷி	...	1	12	0
வரதசுந்தரம்	...	1	4	0
பத்மலோசனி	...	0	12	0
சிங்கநிதி	...	0	12	0
மங்கையர்க்கரசி	...	0	12	0
குலசேகரன்	...	0	12	0
புஷ்பவனம்	...	0	10	0
அயாக்ஷா 2 பாகங்கள்	...	1	12	0
கருணாகரன்	...	0	4	0
சுகுணதீரன் 2 பாகங்கள்	...	2	4	0
அந்தபுரக்காதல்	...	1	0	0
மான்டிக்கிரிஸ்டோ 2 பாகம்	...	3	0	0
ரங்கநாயகி	...	1	4	0

திருவெம்பாவை (இஃது அவிரோதிநாதரால் பாடப்பெற்றது) ... 0 1 6

அழகானந்தன்	...	0	12	0
கோஹர்ஜான்	...	0	8	0
சீனிவாசன் (துப்பறியும் நாவல்)	...	0	6	0
இந்திராணி அல்லது இந்திரபுரிரகசியம்	...	1	4	0
பத்மநிதி	...	0	10	0
தாக்ஷாயணி	...	0	6	0
நீலா அல்லது ராமநாதன்	...	1	4	0
அம்பிகாபதி அல்லது அரசிளங்குமரி	...	0	10	0
இராஜாம்பாள்	...	0	12	0
சந்திரகாந்தா	...	0	12	0
மோகனசுந்தரன்	...	0	12	0
ஆனந்த கிருஷ்ணன்	...	0	12	0
இந்துலீலா	...	0	8	0
நீலக்கொடி	...	0	4	0
நளினசுந்தரி	...	0	8	0
ஜகதலஜகஜ்ஜோதி	...	0	8	0
மதுசூதனன்	...	0	10	0
கனகரத்தினம்	...	0	8	0
மெய்க்காதலி	...	0	8	0
மேனாமினுக்கிகதை	...	0	8	0
வீணாகானன் ஞானேந்திரி	...	0	8	0
அகடவிகடவிலாச விநோதக்கதை	...	0	8	0
அற்புத நவநீதரம்பை	...	1	0	0
மனோன்மணிகதை	...	0	8	0
கோமளவல்லிகதை	...	0	8	0
விகடவல்லிகதை	...	0	4	0
கனவினால்காரியத்தைமுடித்த கமலமதி	...	0	8	0
துயராளன்கதை	...	0	12	0
காமசேனரசிகா	...	0	8	0
பூர்ணவல்லி	...	0	6	0
பூலோகலக்ஷ்மிகதை	...	0	10	0
கண்டிராஜா நாடகம்	...	0	8	0
மருமக்கள் துயரம்	...	0	2	0

அராபிக்கதை	...	2	0	0
ஞானரத்தினம்	...	0	4	0
வஜ்ரலேகை அல்லது துப்பறியும் தீராமணி	...	0	12	0
ஆஸ்திகோபாக்கியானம்	...	0	5	0
சரோஜா	...	0	5	0
தென்னூர்க்கொலை அல்லது துப்பறியும் திறமை		1	4	0
ஆதிலக்ஷ்மி	...	1	12	0
மனோகரி	...	1	0	0
அஞ்சனாக்ஷி	...	2	4	0
கனகாம்புஜம்	...	2	8	0
வசந்தமல்லிகா	...	1	0	0
பாண்டியவம்சபரம்பரை	...	0	8	0
ஆனந்தசுந்தரி	...	0	12	0
லீலாவதி	...	0	12	0
மாலிகாபூஷணி	...	0	10	0
பத்மநாபன்	...	0	10	0
சாரதாம்பாள்	...	0	8	0
வசந்தசேனை	...	0	4	0
உட்டாணி	...	0	6	0
வத்சலா	...	0	8	0
அமீர்சிங்	...	0	12	0
ரஞ்சிதசிங்	...	0	10	0
சரசா	...	0	10	0
நீலகண்டன்	...	0	10	0
சிவானந்தம்	...	0	10	0
இராமமூர்த்தி	...	0	10	0
இரகுநாதன்	...	0	12	0
மதியானந்தவல்லி	...	1	0	0
தலைவாங்கிய அபூர்வசிந்தாமணி	...	1	0	0
மூத்தேவிமார்கதை	...	0	12	0
காலனைவென்ற கற்பகவல்லி	...	0	12	0
கனகவல்லி	...	0	12	0
விவேகானந்தக்கதை	...	0	12	0

பதிவிரதாசிரோமணி	...	0	12	0
கண்ணுமணி	...	0	8	0
தங்கவேணி	...	0	4	0
பாதாளபுவனராணி	...	0	8	0
திண்ணை தூங்கி தடிராமன்	...	0	5	0
அதிசயவல்லி	...	0	12	0
பூலோகலக்ஷ்மி	...	0	12	0
நவரத்தினஒப்பாரி	...	0	5	0
மணிமேகலா	...	1	0	0
மலையைவிழுங்கிய மகாதேவன்கதை	...	0	6	0
உலோகாதிசய விளக்கம்	...	0	8	0
பகவத்கீதை வசனம்	...	1	4	0
அரிச்சந்திரபுராண வசனம்	...	1	8	0
அருணாசலபுராண வசனம்	...	1	0	0
போஜனப்பந்தலில் போர்விளைந்தகதை	...	0	8	0
சடாயு	...	0	8	0

இன்னும் பல புஸ்தகங்களும் கிடைக்கும்.

M. சக்கிரவர்த்தி நயினார்,

சரஸ்வதி விலாச புஸ்தகசாலை,

21, பாரிஷ் வெங்கடாசலய்யர் தெரு

ஜி. டி. சென்னை

[மிஷன் பிரஸ், ஆரணி.]

6A
7-56